# முரசொலி

2

மு. கருணாநிதி

முரசு 1 | சென்னை | 6 — 8 — 54 | வெள்ளி | ஒலி 19


# படை குவிகிறது!

நீட்டிய ஈட்டி முனையை மூடியிருக்கும் இரத்தக்கறை மறையு முன்னர்—களத்திலே ஏற்பட்ட அயர்வை மறைக்க உளத்திலே அரும்பும் வெற்றி நகைப்பு கலையுமுன்னர்—திராவிட முன்னேற்ற கழகம் களத்திலே குதித்து விட்டது, என் தமிழர் எங்கெங்கு உளரோ அங்கெல்லாம்அவதிதானு? என்றதொரு வினு எழுப்பி—தினவுகொண்ட தோள்களுக்கு உணவு கொடுத்து விட்டார் நமது பொதுச் செயலாளர்,

அடக்குமுறைக் கணைகளை ஏவி-போர்த் தளபதிகளைசிறையிலே அடைத்து-திரு-கொச்சி பகுதியிலே பாசீச ஊஞ்சலாடிற்று பட்டம் தாணுப்பிள்ளையின் அரசாங்கம். ஏக இந்தியா என்னும் சர்க்கரைப் பாகுதடவி—மொழி வழி அரசுக்கு பாடை கட்ட எண்ணிய பாரத புத்திரர்கள்தான் ஆயிரமாயிரம் தமிழர்களின் உரிமைக்கீதத்தை செவிசாய்க்க மறுத்தனர், அந்த சர்வாதிகாரப் பிண்டங்களின் மமதையைச் சாட தி, மு, க, போர்க்கொடி ஏந்திப் புறப்பட்டு விட்டது,

"ஏக இந்தியாஎமதுஉரிமைத் தாகத்தைப் போக்க முடியாத மருந்து—ராஜ்யட் புனருத்தாரணக் கமிட்டி என்பது தாயகத்துப் பாசத்தால் கனத்துப் போன எம்நெஞ்சில்—நீர் வேக வைக்கும் சாகசச் சொல் விருந்து—ஒற்றுமை விருத்தம் பாடி ஒன்றுகலந்துவிட்டோம், பதவி மோகத்தால் செயல் மறந்த மாஜி வீரர்களே! உயிர் பிரிந்து உடல் வீழினும்-பற்றிய கொள்கையைவிடமாட்டோம் தாயகத்தை அலங்கோலமாகக் கூறு போடுவதை எம்தாய் தடுத்தாலும் விடோம்" என்று பரணி பாடி—வக்கணை பேசியோர்களின் வார்த்தைப் படகுகளைக் கவிழ்த்து விட்டது தி. மு, க.

ஆம்! நமது பொதுச் செயலாளர் குரல் கொடுத்து விட்டார், சங்கம் வளர்ந்த பூமியிலே—மதுரையம் பதியிலே அறைகூவல் விடுத்துவிட்டார், தி. மு, கழகம் இனி நேரடியாக திருவிதாங்கூர் தமிழரின் அறப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமென்று!

மாணவ மணிகளுக்கோர் தலைவர்-கொள்கைக் குன்றும் நடமாடும் இலட்சிய மன்றமாம் **மதியழகன்** ஆகஸ்ட் 6-ந்தேதி யன்று நாகர்கோவில் செங்கோட்டை நீதி மன்றங்களின் முன் நடக்க இருக்கும்

வர்கள் முன்வந்தார்களில்லை, அன்பு வார்த்தைகள் சொரிந்து மிஞ்சினுல் அச்சுறுத்தி அடக்கி விடப்பார்க்கிருர் நேரு பண்டிதர்,

வாளெடுத்தால் வாழ்வா, சாவா என்பதை உறுதிப் படுத்திக் கொண்டே—செயலாற்றிவரும் தி. மு, கழகம் நாஞ்சில் நாட்டிலே களம் அமைத்து விட்டது, காதலனோடு சேருவதற்கு காதலி துடியாய்த் துடிக்கிருள்—அவளுக்குப்புகலிடம்தந்துபோஷிக்கப் படைக்கலன் எடுத்து விட்டோம்; ஒரு குடியாய்

திரு-கொச்சி-தமிழ் பகுதியில் குமுறும் எரிமலையின் மீது சிறு வீடு அமைத்து விளையாடும் பண்டிதரின் நிலைமை நம் பரிதாபத்தைத்தான்உரிமையாக்கிக் கொள்கிறது. சொந்த பூமியிலே கொழுந்து விட்டெரியும் நெருப்பை அணைக்கமுடியவில்லை. அவர்தான் எங்கோ இருக்கும் இந்தோ சீனத்தில் வெண் புரு பறக்க விடுகிருர்; ஜெனிவா மாநாட்டின் முகப்பிலே ஜெயக் கொடி நாட்டுகிருர்! வெளிநாடுகளில் வெளிச்சம் போடும் இந்நாட்டுப் பிரதமரின் பெருமைதனை தென்னகம் நன்கு அறியும்.

பண்புதனை மறந்துவிட்ட பண்டிதர், முன்பு நம்மை 'நான் சென்ஸ்' என்று அழைத்ததற்கு நல்லதொரு பாடம் பெற்ருர்—

# பாசறை அமைகிறது!!

அடையாள மறியலுக்கான காரியங்களை கவனித்து வருகிருர், அது மட்டுமல்ல;" அறப் போராட்டம் எதுவாக இருந்த போதிலும் சரி, அது மாகாண அரசாங்கத்தை மட்டும் பாதிக்கும் தன்மையில் அல்லாது மத்திய அரசாங்கத்தையும் பாதிக்கும் தன்மையில் அமைய வேண்டும்" என்பதாக தெள்ளத் தெளியச் சொல்லிவிட்டார் பொதுச் செயலாளர்.

மொழி வழி மாகாணம்தான் எமது குறிக்கோள் என்றனர் தேசீயத் தோழர்கள், முன்னர்-நாமும் மகிழ்ந்திருந்தோம்.காங்கிரஸ்கட்சியின் அமைப்பையே மொழி அடிப்படையில்-ஆந்திராவுக்கு ஒரு தனி காங்கிரஸ் கமிட்டி—தமிழ்ப் பிரதேசத்துக்கு ஒரு கமிட்டி என்பதாக அமைத்துக் கொண்டவர்களா தயங்கப் போகிருர்கள் என்று தான் எண்ணியிருந்தோம்—ஆனுல், மக்கள் மனதிலே அதிருப்தியும், அசூயையும் வளரா முன்னர் பிரச்சினையை முடிவு செய்ய டில்லி மூல

வாழ்ந்தோம்— உறு துணையாய் இனியும் வாழ்வோம் என்ற பெரு நினைவோடு! களம்பல கண்ட கழகம்—திருவிதாங்கூர் தமிழ்ப் பகுதியிலே ஆகஸ்ட் 6-அன்று பாடி வீடு அமைத்திருக்கிறது. மலையாள மாந்தரின் பலந்தனை சோதிப்பதற்காக அல்ல; திராவிடரின் நிலந்தனைக் கட்டியாள வேண்டும்; அவர்களின் இன ஒற்றுமையை வெட்டிச் சாய்க்க வேண்டும்-என்று இறுமாந்திருக்கும் டில்லி மூலவர்களின் மமதையைச் சுக்கு நூருக்க தி. மு. கழகம் அறப்போர்க் கொடி ஏந்துகிறது, கேரள மக்களின் நட்புறவுக்கு தினைத்துணையும் ஊறு செய்யாமல்!

இந்த நேரத்தில்தான் நேருப் பண்டிதரின் தலை திரும்பியது-நா அசைந்தது. நாமும் களிப் பெய்திளுேம் சிக்கல் தீர்த்து விடப் போகிருர்—எல்லைச் சிதைவுக்கு முடிவு கட்டிவிடுவாரென்றெல்லாம் எண்ணினுேம்! அவரது அறிக்கை என்றும் போல ஏமாற்றம் தந்துவிட்டது.

இப்போதும் அப்படித்தான் பெறப்போகிருர்-மொழி அரசு அமைப்போம் என்ற உறுதி மொழியை காற்றிலே பறக்க விட்டுவிட்டு—சாகச விழி உருட்டும் பண்டிதர் அரசு, புதியதொரு பாடம் பெறப் போகிறது. தோல்வி கண்டறியா தி, மு. கழகம் தூய பண்புடைத் தோழர் ஜான் அவர்களின் கவனிப்பின் கீழே, திரு. கொச்சி தமிழ்ப்பகுதியில் செருமுகம்நோக்கிவீரர்களை அனுப்புகிறது. சாந்தால் மெழுகி சந்தனத்தால் கோலமிட்டு வாழ்ந்த என்தாயகத்தின் விலங்கொடிப்பேன் - வீறுகொள்வேன்-என தி. மு. கழகத்தின் குரல் கேரளத்துக் கரையில் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. வெற்றி நமது தான்-நெற்றியிலே திலகமிட்டு வரவேற்கக் காத்திருக்கும் வீரத்தாய்மார்கள் மகிழ்ந்திடும் வண்ணம்—நமக்கு எப்போது அழைப்புவரும் களத்திற்கு-என்று ஆவலோடு அண்ணுவின் கண்ணசைவை எதிர்பார்த்துக் காத்திருக்கிருேம் நாம்!

# பூணூல் தளபதியின் புதிய சாணக்கியம்!

“பூவிலே மணமில்லே. பூவோ வாடிப்போய் வகுடு பாய்ந்து கிடக்கிறது. தொடுத்திருக்கும் முறையாவது புதிதாக இருக்கிறதா வென்றால் அதையும் காணோம்” என்று பூக்கடை புகுந்த பூவை சொன்னால், பூக்காரன் அந்தப் பூம்பாவை மீது சீறி விழுவதாமுறை? “உன் பவிசுக்கு இது போதாதா? மரப்பாச்சிப் பொம்மைக்கு இது போதவில்லையாம்!” என்று கடிந்துரைத்தால் கண்டவர்கள் சொல்ல மாட்டார்களா; இவனுக்கு பூ விற்பதல்ல குறிக்கோல்; பெண் பைத்தியம் போலிக்கு” என்று? நங்கை பூ வாங்குவாள், நமக்கும் பணம் கிடைக்கும் என்று நாக்கைத் தட்டிக் கொண்டிருந்து இறுதியிலே ஏமாந்த பூக்கடைக் காரனின் நிலையைத்தான் இவ்வாரத்திய ‘கல்கி’ பத்திரிகை பெற்றிருக்கிறது. பூசுரர் கொணர்ந்த கல்வித்திட்டம் புதை குழி போய், பூஜ்யர்கள் எழுப்பிய ஒப்பாரி ஒடுங்கி, காடாற்றி, கர்ம வினைகள் தீர்ந்து நாட்கள் பல கடந்து விட்டன; ஆனாலும் கல்கியின் புலம்பல் இன்னும் மெல்லிய ‘ஸ்தாயி’ யில் கேட்டுக் கொண்டுதானிருக்கிறது. இப்போதுள்ள கல்விமுறை மிகவும் மட்டமானது என்று பண்டித நேரு எங்கோ சொல்லி விட்டாராம், அதை வைத்துக் கொண்டு புதிய கல்வித்திட்ட எதிர்ப்பாளர்களைத் திட்டி தன் வயிற்றெரிச்சலைக் கொட்டி தீர்த்துக் கொண்டிருக்கிறது. சி. ஆரின் கல்வித்திட்டம் அமுலாக லெட்சக் கணக்கான ரூபாய் தேவைப்படும் என்று நிபுணர்கள் சொன்னபோதெல்லாம் பொதுமக்களின் வரிப்பணத்தைப் பற்றி கவலைப் படாத கல்கி, நேரு வாய் திறந்தபின்பு, “இப்போதுள்ள கல்வித் திட்டத்திற்கு கோடிக் கணக்கான ரூபாய் செலவாகிறது; அது பொதுமக்களின் வரிப் பணம்தான் என்பதை மறந்து விடவேண்டாம்” என்று பாசாங்கு மொழி பேசுகிறது. இப்போதுள்ள கல்வி முறை மோசமானது என்று, கல்கியின் வாதத்திற்காக நாம் ஒப்புக் கொண்டாலும் சி. ஆரின் புதிய கல்வித் திட்டம் இதைக் காட்டிலும் நல்லதென்று நாம் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? மாற்றம் தேவை என்பதற்காக சூடியிருக்கும் கனகாம்பரத்தையும் தூக்கி எறிந்து விட்டு காகிதப் பூவையா சொருகிக் கொள்வது?

ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் புற முதுகிட்ட ஆத்திரத்தில் கல்கி தற்போதைய கல்வித் திட்டத்தை உடைக்க எண்ணுகிறது; தவறு தவறு; உடைக்க எண்ணினால்தான் நல்லவர்கள் செயலாயிற்றே! ஆச்சாரியாருக்கோ டெல்லியிலே நல் செல்வாக்கு. அதே நேரத்தில் நேருப்பண்டிதரும் தற்போதைய கல்வித் திட்டம் ‘மகாமோசம்’ என்று சொல்லி விட்டார், இதையே வாய்ப்பாகக் கொண்டு நேருவின் மூலமாக ஆச்சாரியாரின் பழைய வர்ணாஸ்ரமக் கல்வித் திட்டத்திற்கு முலாம் பூசி மீண்டும் புகுத்தப் பார்க்கலாம் என்று கல்கி வாய் நீர் வடிக்கிறது. கல்கியின் வாசகத்தில் இந்த உட்பொருள் இருக்கிறதா அல்லது எங்களது கற்பனையா என்பதை கீழேபடித்துப் பாருங்கள்

“நேருஜி கூறுகிறபடி முற்றிலும் பயனற்றதாயும் கோடான கோடி ரூபாயை விழுங்குவதாயுமுள்ள இந்த மட்டமான கல்வி முறையை மாற்றி அமைக்க பண்டித ஜவகர்லால் நேரு மனம் வைத்து முயற்சிசெய்தால்முடியும்.

அப்படி அவர் முயற்சி தொடங்கும் போது நாட்டிலுள்ள படித்த முட்டாள்கள், படிக்காத முட்டாள்கள் எல்லோருமாகச் சேர்ந்து நேருஜியை பிரதம மந்திரி பதவியினின்று துரத்த முயன்றாலும் முயலுவார்கள்”

இப்போது புரியும் இந்த வாசகம் எவ்வளவு அகங்காரத்தையும், ஆணவத்தையும் உள்ளடக்கி இருக்கிறதென்பது. பாலர்களை நாசமாக்கி நாட்டைப் பாலைவனமாக்கும் திட்டத்தை எதிர்த்து ஒழித்தவர்கள் முட்டாள்கள் என்றால் அந்தத் தீய திட்டத்திற்கு மாலை சூட்டி வரவேற்ற கல்கியை என்ன பெயரிட்டு அழைப்பது என்றே தெரியவில்லை. நாடு சுதந்திரம் பெற்று ஆண்டு பலவாயிற்று; ஆனமுறையிலே ஒருவராலும் ஒரு கல்வித்திட்டத்தை தயார் செய்ய முடியவில்லை என்கிறார் கல்கியார். நாட்டுமக்களின் சுபிட்சத்திலே நாட்டமுள்ள அரசாங்கமாயிருந்தால் கல்வி நிபுணர்களை ஒன்று கூட்டி “நல்லதோர் திட்டம் தாரீர்’ என்றல்லவா கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்! அதை விடுத்து எமது குருவின் திட்டம்தான் நல்லது — அதையே எப்படியும் புகுத்த முயலுவேன் என்பதா கல்கியின் பெருநோக்கு! கல்கி அதோடு நின்று விடவில்லை. நம்மையெல்லாம் திட்டி முடித்து விட்டு, அன்புத் தொல்லையோ என்னவோ ஆச்சாரியாரையும் சாடியிருக்கிறது. “நேருவைவிரட்டயார்முயன்றாலும் அம்மாதிரி முயற்சிகளுக்கெல்லாம் நேருபின் வாங்கிவிட மாட்டார்’ என்றும் குத்திக் காட்டியிருக்கிறது. இதிலிருந்து புரிகிறதல்லவா ஆச்சாரியாரை கல்கி கோழை என்று சொல்லியிருப்பது. நேரு அஞ்சமாட்டார் என்றால் எதிர்ப்புக்கு அஞ்சி ராஜினாமா செய்த ஆச்சாரியார் கோழை என்று தானே பொருள்? பூணூல் தளபதியின் புதிய சாணக்கியம் நாமறியாததா என்ன?

---

### ரிக்ஷா ஸ்டாண்டில்...

“என்னப்பா கேசவா, இன்னிக்கு ஏதாவது சவாரி கிடைச்சுதா என்ன?”

“நம்ப வெலிங்டன் டாக்கிசில்லே! அதிலே இன்னிக்கு ஒரு புதுப்படம் ஆரம்பமாம்! ஒரே கூட்டம் போ!”

“என்னடா இது! புதுப் படம்னா இவ்வளவு நேரம் எங்கே பாத்தாலும் விளம்பரமாயிருக்குமே! நீ சொல்றது தப்பு கேசவா!”

அட நீ ஒன்னு, இன்னிக்கி மட்டுந்தான் அந்தப் படமாம். காந்தியைப் பத்தி காட்டுறாங்களாம்! இந்தியாவின் குரலாம்அதுக்குபேரு!

“அடடே, காந்தியைப் பத்தினா நாமகூடப் பாத்திருக்கலாமே, கேசவா! ஏழனா எட்டனா போனாத் தான் என்னவாம்!

“அட போப்பா, அங்கே டிக்கட் ஒரு ரூபாக்கி குறஞ்சு இல்லியாம்! ஆமா! நிதி சேக்கிறாங்களாம் நிதி!”

“எதா இருந்தாத்தான் என்னவாம்! நம்ப பணத்திலே என்ன நாத்தமா அடிக்குது இந்த சர்க்காரு இதிலே கூடவா பிடிவாதம் பண்றாங்க”

“சும்மாகூட வேண்டாமே, நம்மப்போல உள்ளவங்க போறப்பலேயாவது டிக்கட்டை குறைச்சிருக்கக்கூடாதா? ஒரு ரூபாய்னு நாம எங்கே போறது?”

“கேசவா இது நம்ப சர்க்காரு, நம்ப மேலே எல்லாம் நம்பிக்கை வந்திருச்சு போலிருக்கு. துட்டுக்கார ஆசாமிங்கதான் காந்தி சொல்றபடி நடக்கல்லேனு தான் அவங்க மட்டும் அந்தப் படத்தை பாக்றப்லே டிக்கட்டை ரூ. 3, 2, 1, ன்னு வச்சுருக்காங்க! அவ்வளவுதான். நீ ஒன்னும்தப்பா நினைச்சுடாதே!

“அடபோப்பா, உனக்கு எப்பவும் கேலியும் கிண்டலுந்தானா? இந்தியாவின் குரலாம்! அதை ஏழைங்க கேட்க முடியல்லே!”

---

## புதுமை — போதையாகத் தெரிகிறது!

★

## சிலை யுடைக்கிறோமாம் — நாம்!

புதிய அரசியல் கட்சிகள் தங்களுடைய விந்தையான தத்துவங்களோடு இலக்கியத் துறையில் நடைபோட முயன்று வருகின்றன. சீர்திருத்த வெறி கொண்டவர்களின் முக்கிய ஆயுதங்களிலே ஒன்று சிலையுடைப்பு. ஆனால் இந்தக் கட்சியாரிடம் சிறப்பான ஓர் அம்சம் இருக்கிறது; இவர்களுடைய பேச்சிலும் எழுத்திலும் வேகமும் வெடிப்பும் இருக்கின்றன. ஏற்கனவே தங்கள் வசமான மக்களுக்கு இவர்கள் போதையை ஏற்றித் தங்கள் தத்துவத்தை நிறைவேற்றப் புதியபுதிய வழிகளைக் கடைப் பிடிக்கிறார்கள். அண்ணாதுரையும் கருணாநிதியும் மற்றையோரும், தங்கள் கட்சியில் அக்கறையோ ஆவலோ இல்லாதவர்களைக் கூடத் தம் சொல் வன்மையினால் கவர்ந்து விடுகிறார்கள். அவர்கள் நவீனங்கள் மட்டுமன்றி ஏராளமான நாடகங்களும் கதைகளும் கட்டுரைகளும் கவிதைகளும் பொழிந்திருக்கிறார்கள்.

கலைமகள் — ஜமுன்

# தலையங்கம்

-ரா-

சென்னை [6—8—54] வெள்ளி

## குடியேற்றம் – குயில் முட்டை !

காமராசர் வெற்றி பெற்றுவிட்டார். நாம், ஆவலோடு எதிர் நோக்கியிருந்த செய்தி அல்ல என்ருலும், ஆத்திரமடைகிற செய்தி அல்ல. காமராசர் வென்ருர்—அதுதான் உண்மை. அத்துடன் காங்கிரசும் வென்றது என்பதை நாம் மறந்துவிடவில்லை. காங்கிரஸ் வெற்றி பெறுகிறதே என்பதற்காக காமராசரை ஆதரிக்கக்கூடாது என்றும் சொல்லவில்லை. காமராசர் வெற்றியடைய வேண்டும் என்ற ஆசையில் அவர் காங்கிரஸ் தலைவர் என்பதையும் மறந்துவிடவில்லை.

தெளிவான அரசியல் கொள்கையுடைய தி. மு. கழகம்—இந்தக் குழப்பமான நிலையை எவ்வாறு சமாளித்தது என்பதை, நாடு நன்கறியும்.

காமராசரின் வெற்றிக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவர் தமிழர்—திராவிடர்—என்ற காரணத்தால் மட்டுமே வெற்றி பெற்ருர் என்று நாம் கூறவில்லை. ஏனெனில் அவரை எதிர்த்துத் தோற்ற தோழரும் தமிழரே—திராவிடரேதான்! வந்ததும் வராததுமாக காமராசர் குலக் கல்வித் திட்டத்தைப் புதை குழிக்கு அனுப்பி வைத்தார். எந்த ஒரு தீய திட்டத்தை எதிர்த்து தமிழகம் கிளர்ச்சி செய்ததோ–எதற்காகப் பல உயிர்களைப் பலியிட்டதோ–அந்த திட்டம் காமராசரால் அழிக்கப்பட்டது என்பது, தேன்பாயும் சேதி தானே திராவிடருக்கு!

மந்திரியாகிவிட்டோம்—மக்கள் அன்பைப்பெற குலக்கல்விக்கும் குழிதோண்டிவிட்டோம் — இனி என்ன — என்று இறுமாந்து இருந்துவிடவில்லை அவர். ஆச்சாரியார் வெறுத்துத் தள்ளிய ஜன நாயகக் குழந்தையை வாரி எடுத்து முத்தமிட்டார். அவரும், ஆச்சாரியாரைப் போலவே—தேர்தலுக்கு நிற்க, தேகத்திலே வலுஇல்லை என்று கூறியிருக்கலாம்—தேசம் ஒப்பாவிடினும் தேசியம் ஒப்பும்! அல்லது எம். எல். சி. தேர்தலில் நின்று சுலபமாக ஜெயக்கொடி பிடித்திருக்கலாம். இந்த முறைகள் எதையுமே பின்பற்ருமல் மக்களால் தேர்ந்தெடுத்த பின்னரே—மந்திரியாக நிலைப்பேன்—என சூளுரைத்த அந்தப் பெரியவர், ஜனநாயகப் பிரியர்கள் அனைவரின் வாழ்த்துக்கும் உரியவர். காமராசர் வாகை மாலை சூடிவிட்டார். ஆம்–அவரால் காங்கிரஸ் வென்றுவிட்டது.

காமராசரை ஆதரிக்காவிட்டாலும்--காங்கிரசையாவது ஆதரித்து ஒப்புக்காக ஒரு அறிக்கை விடுவோம் என்கிற தாராளமனப்பான்மை-வஞ்சகமற்ற எண்ணம்--ஒரு கடுகளவும் ஏற்படவில்லை, சக்கரவர்த்தி திருமகனின் திருக்கல்யாண குணங்களை வர்ணித்து மகிழும் ஆச்சாரியப் பெருந்தகைக்கு! அப்போதுதான் அறிமுகமான சுக்ரீவனுக்காகப் பரிந்து சென்று வாலியை மறைந்திருந்து கொன்ற ராமனின் தயாளத்தை எழுதும் இந்தத் தயாபரர், பல ஆண்டுகள் ஒரே பாசறையில் நின்று விடுதலைப் போர் நடத்திய விருதுநகர் வீரருக்கு துணை போகாவிட்டாலும்—துளியளவு ஆதரவு ஜாடையாவது காட்டியிருக்கலாம். அதுவுமில்லை! அதைக் கேட்கவுமில்லை காமராசர்! மதியாதார் தலைவாசல் மிதியாமை கோடி பெறும் என்பதை ஆச்சாரியார் விஷயத்தில் காமராசர் காட்டிவிட்டார். டில்லியார் விஷயத்திலும் கடைப் பிடிக்க வேண்டிய கட்டத்தில் வந்து நிற்கிருர்.

குடியேற்றம் தேர்தலில்—திராவிடநாட்டு விடுதலைக் கிளர்ச்சியை ஆதரிக்காத இரு சக்திகள் போட்டியிட்டன. அதிலே ஒரு சக்தி ஜெயித்தது என்பது உண்மை, ஆனல், இருசக்திகளுமே—திராவிட நாடு பிரச்சினையை முன்வைத்து தேர்தலுக்கு நிற்கவில்லை என்பதை மறந்து விடக்கூடாது. காங்கிரசின் வெற்றி-திராவிட நாட்டுப் பிரிவினை எதிர்ப்பின் வெற்றி என்று யாரும் கூறமுடியாது. காரணம், திராவிடப் பிரிவினையை முர்க்கமாக எதிர்க்கும் கம்யூனிஸ்ட் கட்சி தோற்றுப் போயிருக்கிறது. ஆகவே தான் நாம் கூறுகிருேம்—தாயகத்தின்விடுதலையைப் பாதிக்கும் விதத்திலே இந்தத் தேர்தல் முடிவு வெளிவரவில்லை என்று! பாதிக்கும் விதத்திலே முடிவுவரவில்லை; ஆனல் பிரிவினையை ஆதரிப்பவரும் வெற்றிபெற்றதாக மகிழ்ச்சியடைய வாய்ப்பில்லை. தமிழகத்தில் இப்போது மலர்ந்துள்ள சூழ்நிலையில் காமராசர் வெற்றி முக்கியத்துவம் பெறுகிறது; அவ்வளவுதான்! அவர் தோற்றிருந்தாலும் காங்கிரஸ்தான் நாடாளப் போகிறது! வேறு புதுமை விளையப் போவதில்லை, வேதியர் வட்டாரத்தில் வெடித்தெழும் பூரிப்பைத்தவிர! குடியேற்றம் காமராசர் வெற்றி—குயில், முட்டை யிட்டதுபோல என்பதை நாமறிவோம். குயில் முட்டையை காக்கைதான் அடை காக்கும் என்று கூறுவார்கள். அதுபோலவே குடியேற்றம் குயில் முட்டையை, டில்லிக் காக்கைதான் அடைகாத்துக் குஞ்சு பொரிக்க கூடிய அந்தஸ்து பெற்றிருக்கிறது!

ஆகவேதான் அடிமைத் திராவிடம், குடியேற்றம் குயில் முட்டையை அனுதாபத்தோடு உற்று நோக்குகிறது! குயில் முட்டை குதூகலம் தருகிறது—ஆனல் அதை அடைகாக்க, காக்கா பிடிக்க வேண்டுமே காமராசர், டில்லிக் கானகத்தில்! அந்த வேதனை வெற்றியின் அளவைக் குறைக்கத்தான் செய்கிறது!




வெற்றி நடைபோடும் காமராசரை அவரது கோட்டைக்குள் இருப்போர் இப்படித்தான் இருதய சுத்தத்(?)தோடு வரவேற்பர். கையிலிருக்கும் கருவிகள் நெஞ்சத்தின் பிரதிபலிப்புக்கள்.

# நானிலத்தின் அச்சாணி நடுத்தர மக்கள்

அவன், 'தாயாதிக் காய்ச்சல்' கொண்ட ஜெர்மானியனை கட்டும், 'பிறவி எதிராளி' பிரஞ்சுக் காரனைகட்டும், எனும் பை நொறுக்க நேரத்தை எதிர் பார்க்கும் அமெரிக்கனைகட்டும், ஆங்கில மக்களை, அரசியல் தந் திரத்தின் மூலமாக மடக்கிப் போட முடியாது என்பதை மனப்பூர்வமாக ஒப்புக் கொள் வான்! தங்களுக்கான அரசியல் அமைப்பிலே ஆங்கில மக்கள் அத்தனைப் பொறுப்புடன் காரிய மாற்றக் கூடியவர்கள்!

தங்களுடைய வாழ்க்கையை அரசியல் பிரச்னையுடன் இணைத் துக் கொண்ட சமுதாயம் ஒன்று இருக்குமானால், அது ஆங்கிலச் சமுதாயம்தான். அதேபோலே, ஒழுங்கும் ஒழுக்கமும் நிறைந்த ஒரு மனிதப் பகுதியைச் சந்திக்க வேண்டுமானால், இங்கிலாந்துத் தீவுக்கு ஓடித்தானாக வேண்டும்!

பொய் பேசுவதானாலும் அதில் ஒரு ஒழுங்கு முறை இருக்கும்; பித்தலாட்டம் செய்து பிழைக்க வேண்டிய கட் டத்திலும் 'ஒழுக்க'த்தைச் சாக டித்து விடமாட்டார்கள்!

இத்தகைய சிறப்புகள் கொண்ட சமுதாயத்தைக் கொண்ட இங்கிலாந்தின ஆட்சி பீடத்தை, இரண்டு கட்சி களுக்கு மேலாக, எந்த நாளி லும் ஆட்டிப் படைத்ததில்லை. நூற்றாண்டுக்கு நூற்றாண்டு கட் சிப் பெயர்கள் மாறிக் கொண்டு வந்திருக்கலாமே தவிர, ஆட்சி யைக் கைப்பற்றும் துணிச்சலு டன் மக்களை அணுகிய கட்சி கள், இரண்டுக்கு மேல் இருந்த தில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்ற ஆராய்ச்சி இங்கு தேவையில்லை என்றாலும், இரண்டு கட்சிகளை மட்டுமே ஆதரிக்கும் மனப் போக்கு இங்கிலாந்து மக்களின் பழக்கமாகி விட்டது என்பது மட்டும் குறிப்பிடத் தக்கதாகும்.

ஃ ஃ ஃ

இரண்டாவது உலகப்போருக் குப் பின்னால், தொழிற் கட்சி தோற்று கன்சர்வேடிவ்கள் ஆட்சி மன்றம் புகுந்தனர்!

இந்த திடீர் திடீர் மாறுதல் கள்தான், இங்கிலாந்தின் அரசி யல் அமைப்பைப் பற்றி மற்ற வர்கள் மலைத்துப் போகும் அளவுக்கு பிரசித்தமாகின்றன.

கன்சர்வேடிவ் கட்சிக்காரன் மறந்தும் தொழிற்கட்சிக்கு ஓட்டுப் போடமாட்டான்; தொழிற் கட்சிக்காரனும் அவ னுக்குச் சளைத்தவனல்ல. சாதா ரண மக்களில் அடிக்கடி கட்சி மாறுவோர்களும் அங்கு அபூர் வம்: அநேகமாக இல்லையென்றும் கூறலாம்!

எனினும் ஆட்சி பீடம் அடிக் கடி கைமாறுகிறது.

இதன் ரகசியம் எதுவாகத் தானிருக்கும்? இங்குள்ள மற்ற வர்க்குத் தெரியாவிட்டாலும், தி. மு. கழகத் தோழர்கள் நிச் சயம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்—வரப்போகும் காலத் தில் வகையுடன் நடந்து கொள்ள!

குறிப்பாகச் சொல்லவேண்டு மானால், இங்கிலாந்தின் ஆட்சி பீடம், குறிப்பிட்ட கட்சியின் கையிலிருந்த போதிலும், அந்தக் கட்சியின் சட்டதிட்டங்களே அங்கு அமுல் நடத்தப்படுகிற தென்பதில்லை. எந்தக் காலத் திலும், தொழிற் கட்சியின் ஆதிக்கத்திலோ, கன்சர்வேடிவ் களின் ஆதிக்கத்திலோ லண்டன் பாராளுமன்றம் பதுங்கிக் கிடந்த தில்லை.

இரண்டு கட்சியிலும் சேராத எந்தக் கட்சியிலும் ஈடுபாடில்லாத மூன்றாவது முகாம் ஒன்றின் கை யிலேதான் ஆட்சியின் சூத்திரக் கயிறு இருக்கிறது!

தொழிற்கட்சியா — கன்சர் வேடிவ்களா என்பதல்ல, இந்த மூன்றாவது முகாம் மக்களின் கவனம்; தங்களுக்கு வசதியேற் படுமா என்பதுதான் அவர்கள் பிரச்னை.

எந்தக் கட்சியின் கொள்கை மேலானது என்பதைக் கவனிக்க அவர்களுக்கு நேரமில்லை—

எரிபொருள் ஏதேஷ்டமாகக் கிடைக்குமா?

ரொட்டித்துண்டு ஒன்று அதிக மாக்கப்படுமா? இறைச்சி மலி வாகக் கிடைக்க வழி செய்யப் படுமா—வெண்ணெய் மார்க்கட் தாராள சிந்தையுடன் திறந்து வைக்கப் படுமா—துணி ஒரு கெஜம் கூடி வருமா—இவைகள் தான் அவர்களின் அரசியல் வியூகம்.

இந்த வியூகத்துக்குத் தக்க படி, ஓட்டுப் பெட்டியில் நிரப்பு வார்கள்.

இதுதான் ஆட்சி பீடம் அடிக் கடி மாறும் ரகசியம்!

எதிலும் சேராமல் தொங்கிக் கொண்டிருக்கும் இவர்களைக் குறித்துதான் அரசியல் வாதி கள் தேர்தல் சமயத்தில் 'பிராண வஸ்தை'ப்படுவார்கள். தொழிற் கட்சி அபேட்சகர்கள், தன் கட் சிக்காரனுக்கு பிரசாரம் செய்ய வேண்டியதில்லை. கன்சர் வேடிவ் கட்சியைக் சேர்ந்தவனிடம் தனக்கே ஓட்டளிக்கும்படி கேட்பதே பைத்தியக்காரத் தனம்!

இந்த 'மூன்றாவது முகாம்' மக்கள் ஏன், இப்படி 'திரிசங்கு' நிலையில் காலங்கழிக்க வேண்டும்? தொழிற்கட்சியுடனோ, கன்சர் வேடிவ்களுடனோ ஏன் சேர்ந்து கொள்ளக்கூடாது?

அவர்களால் முடியாது!

ஏன்? இதற்கு பதில் சொல் வதில்தான் இங்கு நாம் எடுத்துக் கொண்ட விஷயமும் ஆரம்பமாகிறது.

அவர்கள்—அந்த "மூன்றா வது முகாம்" மக்கள், பணத்தில் புரளும் செல்வந்தர்களல்ல; பிச்சை எடுக்கும் பாமரர்களு மல்ல; நடுத்தர வகுப்பினர்.

[ 10-ம் பக்கம் ]

## வருந்துகிறேன்

●

அன்புள்ள தோழர்களுக்கு வணக்கம். எனக்கும் பட முதலாளி ஒருவருக்கும் கதைவசனஉரிமை காரணமாக ஒரு சச்சரவு எழுந்தது. அதன்பின்னர் முரசொலியில் ஒரு கட் டுரை எழுதவேண்டிய நிலை பிறந்தது. எழுத்தாளன் தன் உரிமை பறிக்கப்படும் நேரத்தில் எந்த நிலையடைவான் என்பது அந்நிலையில் இருப்பவருக்கே தெரியும். அதன் கார ணமாக எழுந்த வேதனைக்குரல்தானே ஒழிய கண்டனக் குரல் அல்ல, அந்த முதல் கட்டுரை, சுந்தர் என்ற நண்பனி டம் உரையாடுவது போல எழுதப்பட்ட அந்தக் கட்டுரை -- நேரடியாக அந்த படமுதலாளிக்கும் எனக்குமிடையே எழுந்த நிலைமைகளின் படப் பிடிப்பே தவிர வேறல்ல என் பது, அதைப் படித்துப் பார்ப்பவருக்கு நன்கு புரியும். அந்த குரல் கேட்டு, அதன் பிறகாவது — அந்தப் பட உரிமையா ளர் திருந்த மாட்டாரா என்ற எண்ணத்தையும் — இது போன்ற சம்பவம் எழுத்தாளர்கள் யாருக்குமே நிகழக் கூடாது என்ற கருத்தையும் அதில் குழைத்திருந்தேனே தவிர – வேறுயாரையும் அக்கட்டுரையில் குறிப்பிட்டே னில்லை, முன்பொருமுறை இதுபோலத்தான். ஒரு கட்சிப் பற்றில்லாத புத்தக வியாபாரியின் மீது நடவடிக்கை எடுத்த போது அவர் "கட்சி முத்திரை"யுள்ள நனது பத்திரிகையில் கண்டவாறு எழுத ஆரம்பித்து இன்னும் எழுதிக் கொண்டேயிருக்கிறார், இப்போது — நமது புத்த கங்கள் வேறு சிலரால் அனுமதியின்றி வெளியிடப்படும் போது, அது பற்றி அறிக்கைகள், விளக்கங்கள் கொடுப்பது போலவே சினிமாத்துறையில் ஏற்பட்ட இந்த நிகழ்ச்சிக் காகவும் எழுத நேரிட்டது. ஆனால் இந்த சச்சரவில் சிறிதும் சம்மந்த மில்லாத --- என்னுடைய அருமை நண்பர்கள் சிலர், பழகிய பாசத்தையும் மறந்து பிரச்சினையின் போக்கை தலை கீழாக மாற்றி, நிலைமையை வேறு பாதைக்குத் திருப்பி — வேதனையான சூழ்நிலையை வளர்த்து விட்டார்கள். பதிலுக் குப் பதில் எழுதிக்கொண்டிருக்க அவர்கள் வேறு பாசறை யைச் சேர்ந்தவர்கள் அல்ல! அவைகளுக்கெல்லாம் பதில் அவர்களுக்கே தெரியும் என்றும் நானறிவேன். எப்படியோ — இந்த சூழ்நிலை வளர நான் ஏதாவது காரணமாக இருந் தேன் என்று யாராவது எண்ணினால் அதற் காக வருந்துகிறேன். பல ஆண்டுகளாக, கட்சிக்கும் நாட் டுக்கும், நான் தந்திருக்கிற உழைப்பை — என் தலைவர் அண்ணாவிடத்திலே நான் பெற்றிருக்கிற சகோதர பாசத்தை இதுபோன்ற சொந்த வாழ்வைப் பொறுத்த பிரச் சினைக்காக — பாழாக்கிக் கொள்ள நான் விரும்ப மாட் டேன்; நானென்ன; பொறுப்புள்ள யாருமே விரும்ப மாட் டார்கள். எப்படியோ—இந்த நிலை கட்சித் தோழர்களின் இருதயத்தில் ஏற்படுத்திய புண்ணுக்காக— ஏற்படுத்தியவர் யார்? எவர்? எப்படி? என்கிற பிரச்சினைக்குரிய விஷயங் களில் மீண்டும் புகுந்து குழப்பம் ஏற்படுத்தாமல்-என்னையே நான் நொந்துகொண்டு இந்த மடலை முடித்துக் கொண்டு அன்புத் தோழர்களான உங்களிடம், இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, விடை பெறுகிறேன். வணக்கம்,

மு. கருணாநிதி

[ குமணகாவியம் ]

# கவியரசும் புவியரசும்

[ புதிய உருவகம் ]

வான் தன்னைத் தொட்டுவிட வேண்டும் என்ற
வைராக்யத் தோடு உடல் உயர்த்தும் காட்டில்;
மீன்மேயும் ஓடை ஒன்று; அந்த ஓடை
மிதந்து செல்லும் நடுவழியில்; ஓரிடத்தில்;
தேன்போல சுவை கொடுக்கும் கனியைக்; கீழே
தொங்கவிட்டு; தொங்கவிடும் கிளையின் மீது,
பேன் பார்க்கும் குரங்குகளைத் தூக்கி வைத்துப்
பெருமை தரும், பெரியமா மரத்தின் கீழே;

மோதிரம்போல் சுருண்டுள்ள குழலும்; கொல்லி
மலைமார்பும்; போர் விழியும்; படைத்தோன்; மக்கள்
நீதிக்கு உயிர்தந்தோன்; சந்தர்ப் பத்தால்
நெடுங்காட்டை அடைந்துள்ள குமணன்; கல்வி
வாதமிடும் வாய்மூடிக் கொண்டு; அங்கோர்
வளராத கல்லின்மேல் அமர்ந்து; வாழ்வின்
பாதியிலே ஏற்பட்ட துயர் நினைத்து;
பகை நினைத்துப் பல்கடித்துக் கொண்டி ருந்தான்.

மன்னவனே! என் வீட்டின் நிலையை; எந்தன்
விழி சொலுமுன் நான் கொஞ்சம் சொல்லு கின்றேன்.
தன்தாயின் மார்பில் பால் வராத தாலே
தளிர் வயதுக் குழந்தை அவள் முகத்தை நோக்க;
என் மனைவி, என் முகத்தை நோக்க; போற்றும்
என் அறிவை உணராத மடையர்க் கெல்லாம்,
என் முகத்தைக் காட்டாது மறைத்து, இங்கே
நின் முகத்தை நோக்க வந்தேன் அரசே" என்றான்.

"பசி கண்டு அஞ்சுகின்ற கிழோர் போல
பொருளின்றி, உணவின்றி, வாடுகின்றேன்.
புசிக்கவில்லை, நான் மட்டும் அல்ல, இல்லாள்
பூ, பிஞ்சுத் தரமுள்ள குழந்தை யாவும்!
கசந்துவிட்ட என் வாழ்வு இனித்தால், காதல்
கலை இனிக்கும். காதலினால் உயிர் இனிக்கும்!
இசை அரசே! புறாக்கூடு போலி ருக்கும்
என் அடுப்பைப் புகையவைப்பீர்" என்றான் மீண்டும்.

தன்னுடைய பசிபோக்க, அணில் கடித்துத்
தின்றதொரு பழத்தைப்போல்; குழி விழுந்த
கன்னங்கள்; புள்ளிமான் கொம்பு போல
கிளைபிரிந்த கருந்தாடி; குளத்து நீரில்,
மின்னுகின்ற கெண்டைமீன் வாலைப் போல,
முகந்தன்னில் குனிந்துகொண் டிருக்கும் மீசை
இன்னதொரு தோற்ற முள்ளோன்; "அரசே"
[ என்று
எதிர்வந்து தமிழ் வணக்கம் செய்து நின்றான்.




கலை வளர்க்கும் பாவலனே! நெடு நாளாகக்
காதுக்கு உணவின்றி இருந்தேன். இன்றே,
நிலைமைதனை மாற்றிவிட்டாய். அமுதுபோன்ற
நின்கவிதை நான் கேட்டுக் கவிதை யானேன்.
மலைவளர்க்கும் தமிழ் நாட்டில், உன்னைப்போல
மதிவளர்ப்போர் அதிகரித்துவிட்டால்; இங்கே
தலை தூக்கி ஆடாதா வீரம்? பூணூல்
தனந்தன்னை ஒழிக்காமல் விடுமா நாடு?

"புதியவரே நீவிர்யார்?" என்று; மின்னும்
பொன்முடியை இழந்துவிட்ட வேந்தன் கேட்டான்.
"உதவிசெய்யப் பிறந்து, அதைச் செய்து; என்றும்
ஒடுங்காத கீர்த்திபெற்ற வேந்தே! உம்மை;
எதிர்பார்த்து எதிர்நிற்கும் இந்த ஏழை;
இறவாத கவி வளர்க்கும் கவிஞன்; என் ஊர்,
வெதிராடும் முது விருத்தம்; நாடு என்னை,
ஒப்பிலா மணிப்புலவன் என அழைக்கும்.

நாடெடுத்து வைத்திருக்கும் இலக்கி யத்தை
நானெடுத்து, குறை நீரக் கற்றுப், பின்னர்;
வாடாத திறமை பெற்று, வறுமை யாலே
வாடுகின்றேன். ஆனாலும், கழுவி என்னைப்
பாடையிலே வைக்கும்வரை, ஆவி போன்ற
பசுந்தமிழில் பெரும் புரட்சி செய்து காட்ட,
ஏடெடுப்பேன் அல்லாமல்; பிச்சை கேட்க,
ஓடெடுக்க மாட்டேன் காண் குமண வேந்தே!

"சந்தனத்தைச் செந்தணலின் சாறு என்று
சொன்னானே ஓர் கவிஞன்; அவனைப் போல
சொந்த அறி வோடெதையும், புதுமை யாகச்
சொல்வதுதான் என் வழக்கம். திருட மாட்டேன்.
செந்தமிழின் ஆண்வடிவம் என்று என்னை
செறுக்கோடு நான் சொல்லிக் கொள்ளு கின்றேன்.
பந்தடித்துப் பழகுகின்ற உலகில்; கத்திப்
படை எடுத்த முடிவேந்தே! இன்னும் கேட்பீர்;

பகுத்தறிவைப் பாழ் படுத்தும் புராண ஞானம்
படைத்தவரை என் எழுத்து எதிர்க்கும்; "மாந்தர்
சுகித்திருக்க உதவிசெயும் பொருளை எல்லாம்;
சிலர் சுரண்ட; அதற்கு இடங் கொடுக்கும் ஆட்சி,
பகையன்றோ ஏழைகட்கு?" என்று; வாடும்
பாட்டாளி மக்களுக்கு உணர்த்தும்; வேந்தே!
சுகங் கொடுக்கத் தெரியாமல், அடிமை யாக்கித்
துயர் கொடுக்கும் அரைத்தனத்தை வைக்க லாமா?

எத்தனையோ சீர்திருத்தக் காவி யங்கள்
எழுதி இந்த நாட்டுக்குத் தந்தேன். தெய்வ
சத்தமிடும் கூட்டத்தார், எனது நூலை
"சாவுதரும் பாம்பென்று" தூற்று கின்றார்.
சத்துள்ளத் திறமை பெற்ற கலைஞர் எல்லாம்
சரியாகப் புகழ்கின்றார். ஆனால், யானோ
சொத்தைகளால் தோற்கின்றேன். அறிஞர் கூட்டம்
தோற்பதெல்லாம் அறிவில்லார் இடத்தில் தானே!

துட்டர்களைத் தவிடுபொடி யாக்கி; சூழ்ச்சி
செய்பவரைப் புது நெருப்பில் தள்ளி; வெள்ளி
வட்ட நிலாக் குடைபிடித்து, காற்று சுற்றி
வருகின்ற திசையனைத்தும் அதிர வைத்துக்;
கட்டளை இட் டாண்டேனே; அந்த நாளில்
குமணனிடம் நீவந் திருந்தால்; கோணல்
ஒட்டகத்தின் காலடி போல், முத்தும்; மண்ணில்
ஒளிந்திருக்கும் பசும்பொன்னும் தந்தி ருப்பேன்.

இன்றோ நான் வெறும் மனிதன். உடன் பிறந்த
எதிரியினால் திடீரென்று அணைந்த தீபம்.
என்னிடத்தில் இப்போது; துக்கம், கண்ணீர்,
இவைதவிர ஏதுமில்லை; உன்னைப் போல.
இன்றோ நீ வந்துவிட்டாய். என்ன செய்வேன்
இருந்தாலும் வறுமைதனைப் போக்கு தற்கு
ஒன்று சொல்வேன் அது போலச் செய்க" என்றான்.
ஒப்பில்லா மணிப் பெயரோன் "என்ன?" என்றான்.

விலைகொடுத்துச் செய்துள்ள ஆச னத்தில்,
வீற்றிருக்கும் என் தம்பி யிடத்தில்; எந்தன்
தலை கொடுத்தால், ஆயிரம் பொன் தருவான். உந்தன்
தரித்திரத்தை, அந்தப்பொன் மாற்றி வைக்கும்.
நிலை உயர; நீ உயர; உனது நாட்கள்
நீடிக்க; நற்றமிழ்க்குத் தொண்டு செய்ய
தலை கொடுக்கச் சம்மதித்தேன். வெட்டிச் செல்க.
தமிழ் காக்கும் காவலனே!" என்றான் மன்னன்.

இதைக் கேட்டு, தமிழ்க் கவிஞன் அவனைப் பார்த்து;
"எனக்காகத் தலை கொடுக்கத் துணிந்த வேந்தே!
வதைக்கின்ற பசிவந்து, இன்னும் என்னை
வாட்டிடினும் வாட்டட்டும். பிறர்செல் வத்தைப்
பதுக்குகின்ற கொடியவரின் வாட்கள்; என்னைப்
பல கூறு போடட்டும். நோய்கள் வந்து;
"சதி செய்யும் இவ்வுலகம் உனக்கேன்" என்று
சாவுலகம் அழைக்கட்டும். ஏற்பேன். ஆனால்;

புது நினைவைப் பாராட்டும் வேந்தே! உம்மைப்
புலி வந்து தின்னவரின், அதற்கு எந்தன்
சதை கொடுத்து, நான் சாவ தன்றி, உம்மை
சத்தியமாய்ச் சாகவிடேன். கோட்டை நெல்லை
விதைக்காமல் வேகவைத்து விட்டால்; பின்னர்
உழவெங்கே? பயிரெங்கே? விளைவு எங்கே?
புது விளக்கு தனை அணைத்து, அதை எடுத்துப்
போகவோ இங்கு வந்தேன். என்றான். சென்றான்.



ச க்கரவர்த்தி திருமகனைப்பற்றி எழுதி வந்த ஆச்சாரியார், இந்த வாரத்தில் ஜமதக்கினி குமாரனைப் பற்றி எழுத வேண்டிய நெருக்கடி மிகுந்த கட்டத்திற்கு ஆளாகிவிட்டார். அதை தந்திரமாக சமாளித்து விட்டதாக எண்ணி, குழப்பம் தரும் விஷயங்களில் தலையிடாமலேயே அவசர அவசரமாக கதையைக்கூறி முடித்துவிட்டு வேறுபக்கம் பேனவை வேகமாகத் திருப்பியிருக்கிறார்.

ராமாயணத்தில் ராமன்—இன்னொரு ராமனைசந்திக்கவேண்டிய கட்டம் வருகிறது. இவனே கோதண்டராமன். இவன் சந்திக்கிற ராமனே பரசுராமன். கோதண்ட மேந்தி ராஜகோத்திரத்தை ரட்சிப்பதற்காக மகாவிஷ்ணு எடுத்த அவதாரம் இவன். கோடரி ஏந்தி க்ஷத்திரியப் பூண்டு இல்லாமல்செய்துவிட விஷ்ணு எடுத்த அவதாரம் அவன். பரசுராமன விஷ்ணுவின் ஆறுவது அவதாரம். ஸ்ரீராமன் ஏழாவது அவதாரம். இரு அவதாரங்களும் ஏககாலத்தில் ஒன்றோடொன்று போர்புரிகின்றன. இதை ஆச்சாரியார் தனது கட்டுரையிலே மூடி மறைத்துவிட்டார். இரு ராமர்களும் மோதிக் கொள்வதைச் சொன்னார். ஆனால் பரசுராமன் விஷ்ணுவின் அவதாரம் என்ற கதையைச் சொல்லாமல் விட்டுவிட்டார். காரணம் என்னவென்று கருதுகிறீர்கள்?

“தேவபாயசப் பங்கின் விகிதாசாரப்படி, முறையே ராமன் விஷ்ணுவில் பாதியென்றும், லக்ஷ்மணன் விஷ்ணுவில் கால் பகுதியென்றும், பரதசத்ருக்கனர் ஒவ்வொருவர் அரைக்கால் பங்கு என்றும் சொல்லப்படுகிறது”

என்பதாக ஜூனின் 6-ம் தேதி இதழில் கல்கியில் அவரே எழுதியிருக்கிறார். இப்போது அவரே பரசுராமனும் விஷ்ணுவின் அவதாரமே என்று கூறினல்—என்னய்யா முழுப்பங்கையும்—தான் கூறுபோட்டு தசரதன் மனைவிகளுக்கு மக்களாக அளித்து விட்டார்களே; பிறகு எந்தப் பங்கில் பரசுராமர் பிறந்திருந்தார்?” என்று யாராவது கேட்டுவிடுவார்கள் என்று எண்ணித்தான், பரசுராமன் கதைகூற வந்த பார்ப்பன குல ரக்ஷகர் ஆச்சாரியார் அவர்கள் அவனை விஷ்ணு அவதாரம் என்று சொல்லாமல் விட்டார் போலும்!

விஷ்ணு அவதாரம் என்று கூறவில்லையே தவிர பரசுராமன் அவதார புருஷன் என்பதை அவர் சொல்லத் தவறவில்லை.

“தசரத ராமன் வில்லை வளைத்ததும், பரசுராமருடைய தேஜஸானது வாடிவிட்டது. அவருடைய அவதார சக்தி அந்தக் கணத்தில் மறைந்தது.”

என்று ஆகஸ்ட் 1-ந்தேதி கல்கியில் அவர் எழுதியிருக்கிறார். பரசுராமன் கதையைச் சுருக்கிக் கொண்டு, அதற்குப் பதிலாக வால்மீகியினுடைய கதை அமைக்கும் திறமைக்கு பஜகோவிந்தம் பாடியிருக்கிறார்.

“சாதாரண நாடகங்களில் வரும் பாத்திரங்களைப் போல் வால்மீகியின் இதிகாசத்தில்உள்ள பாத்திரங்கள் கடைசி வரையில் நின்று அவ்வப்போது, தகுந்த சமயங்களில் திரும்ப வந்து தங்களைக் காட்டிக் கொள்ளுகிறதில்லை. கதாபாத்திரங்களை விமரிசை செய்வதில் விசேஷ ரசம் காணும் நாவலர்கள் இதைக் கவனத்தில் வைக்கவேண்டும்.”

வால்மீகியை முன் மாதிரியாக வைத்து கதைபுனைவோர் பாத்திரங்களை அமைக்க வேண்டுமாம். உண்மையாகவே ஆச்சாரியார் மனதாரச் சொல்லுகிறாரா இந்த கருத்தை என்று சிந்திக்க வேண்டும்நாம்!




விஷ்ணுவின் அவதாரங்கள் — அதாவது ஆறுவது அவதாரமும் ஏழாவது அவதாரமும் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்ளும்போது அதை முழுதும் விளக்கமாகச் சொல்ல முடியாமல் வருந்தி—பரசுராமன் யாருடைய அவதாரம் என்பதையே மறைத்து — கட்டுரையைக் கன வேகமாகத் திட்டும்போது—ஆச்சாரியார், மனதிற்குள்ளாகவே வால்மீகியை எப்படியெப்படி எல்லாம் குறைகூறியிருப்பார் என்பது நமக்கு விளங்காமலில்லை. பால காண்டத்தில் வரும் விஸ்வாமித்ரப் பாத்திரம் பிறகு வருவதேயில்லை. சித்ர கூடத்திலிருந்து திரும்பிய பரதன் பிறகு ராமன் அயோத்தி திரும்பும்போது தான் வருகிறான். அயோத்யா காண்டத்துக் கைகேயி பிறகு எங்கேயோ மறைந்து போகிறாள்.

இவையெல்லாம் வால்மீகியின் கதையமைக்கும் திறமைக்கு சான்றுகளாம் — ஆச்சாரியார் அப்படித்தான் கூறுகிறார். ஒரு காண்டத்தில் வருபவர்கள் இன்னொரு காண்டத்தில் வருவதில்லை என்ற அளவுக்கு திறமையுடன் கதை அமைத்த அந்தக் கதை மேதை — ஆறுவது அவதாரத்தில் வந்த பரசுராமனை, ஏழாவது அவதாரத்தில்கொண்டு வந்து ஆச்சாரியாரையும் குழப்பி விட்டிருக்கிறாரே, ஏன் என்றுதான் நமக்குக் கேட்கத் தோன்றுகிறது!

கதையமைப்பில் வரும் துணைப் பாத்திரங்கள்கதையைவிறுவிறுப்பாக ஓடச்செய்வதற்குத் துணை புரிந்துவிட்டு அத்துடன் மறைந்து விடுவது வழக்கம் தான். ஆனால் கதையில் வரும் முக்கிய பாத்திரங்களும் அப்படி ஆக்கப்பட்டு விட்டால் அந்தக் கதாசிரியனைப் பாராட்டிக் கொண்டிருக்க முடியாது.

பரதன் சித்ரகூடத்தில் காணப்பட்டு—பின், இராமர் வனவாசம், முடிந்தபிறகுதான் கதையில் வருகிறான் என்பது கதை, மேதையின் திறமையைக் காட்டுவது ஆகாது! அண்ணன் மீது அடங்காத பாசம் கொண்டவனாக ஆரண்யம் ஓடிவந்து, அவனது காலணிகளைத் தன் தலையிலே சுமந்து சென்ற தம்பியாம் பரதன்—அதன் பிறகு பதினான்கு ஆண்டு வரையில் ராமன் முதலானோர் என்ன ஆனார்கள் என்பதைப் பற்றியே கவலையெடுத்துக் கொள்ளாமல் இருந்தான் என்று சித்தரித்திருப்பது வால்மீகியின் திறமையைக் காட்டுவது அல்ல! மற்ற கதாசிரியர்கள் பின்பற்றக் கூடிய பாதையும் அல்ல அந்தப்பாதை!

இங்கே வாசகர்கள் ஒன்று கவனிக்க வேண்டும்—இதுவரையில் ‘சக்கரவர்த்தி திருமகன்’ கட்டுரைகளில் ராமன் ஒரு அவதாரம் என்பதைப் பலவகைகளிலே வலியுறுத்தியும், ராமாயணம் என்பது கடவுள் அவதார மகிமையால் நடைபெற்ற ஒரு வரலாற்றுச் சம்பவம் என்பதை வளைந்து வளைந்து எழுதியும், தேவர் யாவர்? அசுரர் யாவர்? என்ற விளக்கங்களைத் தனக்கே உரிய சாணக்கிய முறையில் தந்தும், ராமர் கோஷ்டியார் மீது மக்களுக்குள்ள தெய்வீக பக்தி—மூடநம்பிக்கை — முதலியவைகளுக்கு சிறு தேய்வும் ஏற்பட்டு விடாமல் பாதுகாத்தும்—தனது பேனவை ஓட்டிச் சென்ற ஆச்சாரியார் அவர்கள், இந்தக் கட்டுரையில், திடீரென்று—ராமர்—பரதன்—முதலியவர்களை “கதாபாத்திரங்கள் என்று கூறியிருக்கிறார்.

தனது முதல் கட்டுரையில் “ராமர் கடவுள் அவதாரமல்ல — ஒரு ராஜகுமாரன் மட்டுமே என்ற கருத்தை வெளியிட்டவர்—அதன்பிறகு பல முரண்பட்ட கட்டுரைகளை தொடர்ந்து எழுதிவிட்டு-இப்போது மீண்டும், ராமன் முதலியவர்களை வால்மீகிசிருஷ்டித்த கதாபாத்திரங்கள் என்ற அளவில் கொண்டு வந்து நிறுத்தி யிருக்கிறார். இதையேதொடர்ந்து, அந்தக் கதாபாத்திரங்களின் தன்மையை அவர் வாரந்தோறும் படம் பிடித்துக் காட்டுவாரேயானல் — இதுவரையில், பத்து கட்டுரைகளில் ஏற்பட்ட முரண விஷயங்களுக்கு — கழுவாய் தேடிக் கொண்டவராவார். ஆனல் ஆச்சாரியாரா செய்வார் அப்படி! அவர் தன் இனத்தை வாழ்விக்க வந்த ‘மகானு’யிற்றே! நம்பிக்கையில்லை நமக்கு!

“விசுவகர் மாவால் பூர்வம் இரண்டு சிறந்த வில்லுகள் செய்யப பட்டன. இரண்டும் சம சிறப்பு வாய்ந்தவை. ஒன்று திரியம்பகனுக்குத் தரப் பட்டது. இரண்டாவது வில் திருமாலுக்குத் தரப்பட்டது. அந்த விஷ்ணு தனுசு இது. இந்த வில்லை வளைக்க முடியுமா பார்!” இவ்வாறு பரசுராமர் உரத்த குரலில், சக்கரவர்த்தி திருமகனிடம் கூறினார்.

ஆச்சாரியார் எழுதியிருக்கிறார் இப்படி! திரிபுரம்—திரியம்பகன்—விஷ்ணு— முதலிய தெய்

[ 7-ம் பக்கம் ]

## சக்கரவர்த்தி.....

[ 6-ம் பக்க தொடர்ச்சி ]

வீகச் சொற்களை எப்படியும் மக்கள் மனதில் இன்னும் ஆழப்பதிய வைக்கவேண்டும் என்றுதான் அவர் நினைத்திருக்கிறார் என்பதற்கு இது ஒரு சான்று!

இரு விஷ்ணு அவதாரங்கள். அதிலே ஒரு விஷ்ணு அவதாரம், இன்னொரு விஷ்ணு அவதாரத்திடம் — விஷ்ணுவின் வில்லைப் பற்றிய விபரம் கூறுகிறது! சிரிப்புத்தான் வருகிறது நமக்கு இந்தச் சம்பவத்தைப் படிக்கும்போது! இப்படிப் பட்ட ஒரு உடைசல் சம்பவத்தை தீட்டிக் காட்டும் வால்மீகி ரிஷி பெரியதோர் கதை மேதையாம்! அவரை மற்றவர்களும் பின்பற்ற வேண்டுமாம்! அவரைப் போலவே பாத்திரங்களை சிருஷ்டிக்க வேண்டுமாம்! வால்மீகி இப்படி முரண்படுகிறார். அந்த வால்மீகிக்கு வாழ்த்து வழங்கிட வந்த ஆச்சாரியார் நிலையும் அப்படியேதான்; பாபம்! இதோ இன்னொன்று — சக்கரவர்த்தியாரின் சாமர்த்தியத்திற்கு உரைகல் போல்!

"ராமனுடைய பிரியத்தை அனுபவித்த சீதையின் காந்தியானது, தேவலோகத்தில் சாட்சாத் சீதேவியின் காந்தியைப் போல் பிரகாசித்தது"

முரண்பாட்டைப் பாருங்கள் நண்பர்களே! சீதையின் ஒளி, தேவலோக சீதேவியின் ஒளியைப் போல் இருந்ததாம்!

அப்படியானால் என்ன புரிகிறது நமக்கு! "சீதாதேவி என்பவள் ஒருமானிட ஜாதிப்பெண்; அவளுடைய அழகானது, தேவலோக சீதேவியின் அழகைப் போல இருந்தது" என்பது தானே ஆச்சாரியாரின் சொல்லுக்குப் பொருள். அதுமட்டுமல்லாமல்; சீதாதேவி வேறு, சீதேவி என்ற தேவலோகப் பெண் வேறு—என்ற கருத்தும் வெளியாகிறதல்லவா?

"அவனைப் போல இவன் அழகு" என்றால் அவன் வேறு இவன் வேறு என்று தானே பொருள.

அப்படியானால்ஆச்சாரியாரின் ஆகஸ்டு 1-ம்நாள் வாசகப்படி சீதை யென்பவள் தேவலோக சீதேவியின் அவதாரமல்ல; அவள் வேறு இவள் வேறு என்று தானே நாம் எண்ண வேண்டும்!

அப்படி தெளிவாக எண்ண விடுவாரா ஆச்சாரியார்? அவர் தீக்ஷண்ய மூளைபடைத்தவராயிற்றே! இதோ குழப்புகிறார் பாருங்கள்!

ஆகஸ்டு 1-ந்தேதி தேவலோக சீதேவி போல ஒளி பெற்றுள் ராமன் மனைவி சீதை என்றவர், ஜுலை—25-ம் நாள் கல்கியில் என்ன எழுதியிருக்கிறார் தெரியுமா?

மிதிலாபுரியில், ராமனுக்கும் சீதைக்கும் திருமணம் நடைபெறுகிறது. ராமனும் சீதையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறார்கள். அங்கே ஆச்சாரியார் கூறுகிறார்—

"ஜனகர் சீதையை ராமனிடம் ஒப்புவித்து விட்டார். சீதையும் சக்கரவர்த்திதிருமகனும், பழைய பாற்கடல் காதலர்கள்அல்லவோ! பிரிந்தவர்கள் மறுபடியும் ஒன்று கூடும் மகிழ்ச்சியை அடைந்தார்கள்."

பாற்கடலின் பழைய காதலர்கள்யார்? விஷ்ணுவும் லக்ஷ்மியும் தானே! ஆகஸ்டு 1-ந்தேதி தேவலோக சீதேவியைப் போல பிரகாசித்த சீதை, ஜுலை 25-ந் தேதி ஆச்சாரியார் பேனாமுனையில் தேவலோக சீதேவியின் அவதாரமாகவே இருந்திருக்கிறாள்! இந்த முரண்பாட்டை எங்கே போய்ச் சொல்வது! அடாராமா!!!

ராமன் மீது சீதை வைத்த அன்பைப் பாராட்டி அனுசூயை பேசும் போது, சீதை சொன்னாளாம்;

"தாயைப் போலும் தகப்பனைப் போலும் என்னைக்காத்து வருகிற ராமரை நான் எப்படிக் காதலிக்காமலிருக்க முடியும்?" என்று!

நம்நாட்டு யுவர்களும், யுவதிகளும், சீதையின் இந்த வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும். என்பதாக ஆச்சாரியார் இந்த வாரம் தன் கட்டுரையை முடித்திருக்கிறார்.

ராமன் சீதையை — தாயைப் போல் — தந்தையைப் போல் காப்பாற்றினாலும்! யாரோ ஒரு சலவைத் தொழிலாளி சந்து முனையிலே பேசிய பேச்சைக் கேட்டு, கர்ப்பவதியான மனைவி சீதாதேவியைக் கானகத்திற்கு அனுப்பிவிட்ட ராமன்தான் — தாய்க்கும், தந்தைக்கும் சமமாகச் சொல்லப் படுகிறான். தமிழ் நாட்டுப் பெண்மணிகளே! உங்களிடம் தாய் தந்தைபோல அன்பு காட்டுகிற ஆருயிர்க் கணவர்களிடம் நீங்கள் அன்பு காட்டுங்கள்; நான் வேண்டாமென்று கூறவில்லை! கூறமாட்டேன்! ஆனால்—தமிழ் நாட்டு ஆண் மக்களே! மனைவியிடம், மாதா பிதா போல அன்பு காட்டுவது என்றால்- அவளை கர்ப்பமாயிருக்கும் போது காட்டுக்கு அனுப்புவது என்று அர்த்தம் — என்பதாக ராமனைப் போல தயவு செய்து எண்ணிவிடாதீர்கள்!

●

## குறளோவியம்

பண்பாடும் தென்றல் தவழ் சோலை—நேரமோ மாலை-கண் பாடும் காதல் பாட்டால் கட்டழகன் ஒருவனை மயக்கி நிற்கிறாள் கனங்குழை அணங்கொருத்தி. அவள் மாதோ-மயிலோ என ஐயுற்று நிற்கிறான் அந்தப் பருவ இளைஞன்.

அணங்கு கோலாய் மயில் கோல்லோ கனங்குழை
மாதர் கோல் மாறுமேன் னெஞ்சு.

என ஏங்குகிறான். மனம் வீங்குகிறான். இவன் அவளைப் பார்த்து விட்டான். அவளும் இவனைப் பார்த்து விட்டாள். அவள் மீது எந்தக் குற்றமுமில்லை. ஆனாலும் அவள்மீது அவன் பழி சுமத்துகிறான். மின்னல் கண்ணைப் பறிக்கிறது. அது மின்னலின் குற்றமா? அதைப் பார்ப்பவர் குற்றமா? மின்னலைப் பார்த்து ரசிக்க விரும்புகிறவன் அந்த மின்னல் தரும் இன்னலைக் குறித்து வருந்துவது போல—வள்ளுவர் படைத்துள்ள கதாநாயகனும் வருந்துகிறானாம். வள்ளுவரின் வயது என்னவோ; நமக்குத் தெரியாது—ஆனாலும் காதலைப் பற்றி எழுதும் போது அவர் ஒரு கிண்டற்கார வாலிபப் புலவராகவே மாறிவிடுகிறார்.

"என்னுடைய நோக்கிற்கு, எதிர் நோக்கு வழங்கும் அந்த அணங்கு, சேனையைக் கொண்டுவந்து என்னை எதிர்த்து வருத்துவது போலிருக்கிறது" எனப் புலம்புகிறான். அந்தக் குறளோவியம் இதோ!

" நோக்கினா ளேக்கெதிர் நோக்குதனக் கணங்கு
தானைக் கோண்டன்ன துடைத்து. "

## பெண்

●

" மதுக்குடமே! மலர் வனமே "— என்றெல்லாம் அலங்கார வார்த்தைகளால் பெண்களை கவிஞர்கள் வர்ணிக்கிறார்கள். கட்டிளங் காளைகளும், கவிதா சிரோன்மணிகளும், "ஆருயிரே! அமுத மொழியே" என்றெல்லாம் புகழ்மொழி பகர்ந்து பெண்களை விலை மதிப்பில்லாத செல்வங்களாக்கி விட்டார்கள். எனினும் மேல் நாடுகளிலே, பெண்ணின் ஒவ்வொரு அங்கமும் விலை மதிப்பிடப் பட்டு விட்டன.

நாடகம் ஆடுகையில், திரை அறுந்து வீழ்ந்த காரணத்தால் நாடகமாதொருத்தியின் முழங்கை சேத மடைந்தது. அதற்கு நஷ்ட ஈடாக சுமார் 2400 பவுன்கள் அந்த கம்பெனி தர வேண்டுமென்று நீதிபதி கொடார்ட் சமீபத்தில் உத்தர விட்டார். அன்றியும், கார்மேகக் கூந்தல் இயந்திரம் ஒன்றில் சிக்குண்டு சீரழிந்த காரணத்திற்காக சீமாட்டி ஒருத்தி சுமார் 7500 பவுன்கள் நஷ்ட ஈடு பெற்றிருக்கிறாள்.

இங்கிலாந்தில் கல்யாணமாகாத கன்னிப் பெண் ஒருத்தியின் இடது கால் 750 பவுன்களும், வலது கால் 700 பவுன்களும் நஷ்டஈடு வழக்கு ஒன்றில் மதிப்பு பெற்றிருக்கிறது.

பெட்டி டேவிஸ் என்னும் பிரபல சினிமாநடிகை, தன் மெலிந்த அழகை பத்தாயிரம் பவுன்களுக்கு இன்ஷியூர் செய்திருந்தாள். தன் தாடையில் ஒரு சிறு பகுதியை எடுத்துவிட வேண்டுமென்று படத் தயாரிப்பாளர்கள் விரும்பியபோது ஒலிவியா டி ஹாவிலாண்ட் என்றஹாலிவுட் நட்சத்திரம் ஊறு ஏற்படாமலிருக்க 25 ஆயிரம் பவுன்களுக்கு இன்ஷியூர் செய்து கொண்டாள்.

நீதிபதி வாலிஸ் சுருக்கமாகச்சொல்கிறார்: 'திறமையான—கவர்ச்சியுள்ள மதிப்பளிக்கக் கூடிய மனைவி சுமார் 500 பவுன்கள்தான் மதிப்பிடப் படுகிறாள், என்று! காவிய கர்த்தாக்கள்-ஓவிய விற்பன்னர்கள்-இவர்களெல்லாம் மதிப்பிட முடியாமல் தவித்த பெருஞ் செல்வத்தை மேலை நாட்டவர்கள் இந்த விதத்திலே மதிப்பிட்டு விட்டார்கள்!

[ நினைவுச் சுழல் ]

# ★ மயிலாப்பூர் மாணவி ★

[ தென்னரசு ]

ஜூலை 25! அந்தி நேரம்! ஒருபுறம் வர்ணஜால மோட்டார்களின் வரிசை. விண்ணகத்துத் தாரகைகளால் கோர்த்தெடுத்த ஒளிமாலையென எங்கும் மின் விளக்குத் தோரணங்கள்! நாட்புறமும் 'வருக' சொல்லி வரவேற்கும் வாழ்த்து வளைவுகள். ஆடிக்கிருத்திகையோ, அறுபத்தி மூவர் திருநாளோ என ஜனத்திரள். ஆனால் இவைகளுக்கெல்லாம் பத்து நாட்களுக்கு முன்னதாகவே 'பிட்நோட்டீஸ்' பிரச்சாரம் செய்தது அக்ரகாரத் 'திண்ணைப் பேச்சு'த்தான். 'மயிலாப்பூரில் அண்ணுதுரையா? ஆண்டவன் சன்னதியில்நின்று ஆண்டவனைத் திட்டப்போவதை நாம் காணுவதா?'' என்ற வெறி உணர்ச்சி ஒவ்வொரு பார்ப்பனக் குடும்பத்திற்குள்ளும் புகுந்து விட்டது. வண்டு நினைத்தால் வாசமலரை மலர்விக்காது செய்துவிடலாம்; ஆந்தை விரும்பாவிட்டால் ஆதவன் எழும்ப மாட்டான் என்ற எண்ணம் போலும் அவர்களுக்கு!

அண்ணுதுரை வந்துபேசினுல் ஆயிரமாயிரம் அனர்த்தங்கள் விளையும் என அவர்கள் எதிர்பார்த்தார்கள். அடுக்குச் சொல்லாலேயே ஆண்டவனைத் திட்டுவானே என்றுகூட அவர்கள் விம்மியதுண்டு. ஆனால் இந்த ஜூலை 25, என்போன்ற படித்த மாணவிகளின் உள்ளத்தில் சுடர் விட்டெரிந்த தாவேஷ ஜுவாலையை அணைத்துவிட்டு புத்தம் புதிய சிந்தனை விளக்கை ஏற்றி விட்டதென்றே சொல்வேன். மறுநாள், எனக்கு ஜாதகப் பொருத்தம் பார்க்கிற நாள், ஜாதகம் பொருத்தமாகிவிட்டால் காலை 10-மணிக்கே முகூர்த்தக்கால் நாட்டிவிடுவதென்றே எனது பெற்றோர்கள் தீர்மானித்திருந்தார்கள்; அன்று மாலை அண்ணுதுரை பேசுகிறார்; அதுவும் "வருங்கால வாழ்வை, குறைந்த தொகைக்கு நிர்ணயித்துக் கூறும் புரோகிதர்களின் கணிப்பு தவறினுல் அவர்களை நீதிக்கு முன்பாக நிறுத்தவேண்டும்'' என்று அவர் கண்டித்துப் பேசினுல் என்நிலை எப்படியிருக்கும் -யூகித்துப்பாருங்கள். விரிந்து கிடக்கும் வாழ்க்கைக் கடலின் கரையிலே நிற்கும் எனக்கு நினைவுச் சுழல் ஏற்படாதா? உள்ளத்திலே திகில் முளைக்காதா?

அவர் உதிர்த்த அந்த சொற்றொடர், கருத்துக் கோர்வை என் இதயத்திரையிலேபயங்கரச் சித்திரங்களை தீட்டிக்காட்டியது. அவளைப்பார்த்துவிட்டு வந்தால் போதும் என நினைத்து மாடிக்கு போனநான், பேச்சிலே லயித்து மாடியிலேயேஇருந்துவிட்டேன். ஆனால் ஜாதகத்தைப் பற்றி அவர் பேசிய பின்பு, அவர் பேசிய பேச்சு ஒருவார்த்தைகூட என் காதில் விழவில்லை. காரணம் நான் அங்கிருந்தால் தானே! ஆம் நினைவை இழந்தேன்.

ஃ ஃ ஃ

வசந்த வனம்—நான் கண்டும் கேட்டுமிராத புதியநாடு. பெயருக்கேற்ற வளம் அங்கில்லை—ஆனால் பேயாட்சி நடத்தும் வறுமையும் கிடையாது. கொற்றவன், நீதிமான் என மற்றவர்களால் புகழப்பட்டவன்தான் என்றாலும் அன்றைய வழக்கு அவன் மூளையைக் குழப்பியது. வாளெடுத்துப் பார் குலுக்கிய வேந்தனை எதிர் நின்று வழக்காடிய அந்த இளமங்கை திணறடிக்கிறுள். துவண்டு போன தோகை, சிறுவாய் திறந்த, சீவிய இளநீர் எனக் கண்ணீர்கொட்டும் கண்கள்-பேசுகிறுள்-சலவைக்கல் மண்டபம் அதிர்கிறது. மன்னன் மிரளுகிறுன். தாழ்ந்த குரலில் பேசுகிறுன்.

"பெண்ணே, அமைதியாகப் பேசு. கண்ணீரைத் துடைத்துக் கொள்''

"துடைத்தாலும் தூர்ந்து போகக்கூடியதல்ல கண்ணீர் ஊற்று. இது துன்பக் கண்ணீர் வேந்தே! இதயத்தின் அடிவாரத்திலிருந்து, மூட்டப்படும் வேதனைத்தீயின் ஆவி நீர்த்துளிகள்!''

"வழக்கைச்சொல் — வம்பை வளர்க்காதே!''

மங்கையின் இடைவிடாத பேச்சு, மன்னனுக்கு கோபத்தை ஊட்டியது- எதிரே குற்றக் கூண்டில், நெருக்குநேராக நிறுத்தப் பட்டிருக்கும் அந்தப் பெண்ணையும், பழமென வெளுத்து, சிரித்த தொந்தியுடன் நின்ற நகர் புரோகிதரையும் மாறி மாறி பார்த்தார் வேந்தர்.

'வழக்கைச் சொல்!''-சொன்னுன் வேந்தன்.

பெண் சொல்கிறுள்;

வசந்தவன அரசாங்கத்தின் கணக்காயர் மகள் நான். எங்கள் குடும்பத்திற்கு நான்தான் குலக்கொடி — ஒரே மணித்திலகம். என் தந்தை சிவபக்தர். ஆண்டவனின் அனுமதி பெற்றுத்தான் ஆகாரம் கூட உட்கொள்வார். 'உருவத்தில் கந்தச் சிற்பம், ஊர்வசியின் பிரதிபிம்பம்' என ஊரார் என் அழகைப் பற்றிப் பேசும் பருவம் வந்ததும் என் தந்தை, எனக்கு திருமணம் செய்துவைக்கத் திட்டமிட்டார். "வேண்டாம், என் வாழ்வை கருக்கி விடாதீர்கள். காவியத்தின் வர்ணனைகளை தூரிகையால் சொர்ண ஓவியத்தில் தீட்டிக் காட்டும் சித்திரக்காரன் ஒருவன் என்மனதைக் கவர்ந்து விட்டான். என்னை அடக்கி ஆளும் ராசனுகிவிட்டான். நானும் இசைந்து விட்டேன். என்னை அவனிடம் விட்டு விடுங்கள் என்றேன்'' என் தந்தை சினங் கொண்டார் — சீறிப்பாய்ந்தார்.

"செவ்வாய் தோஷக் காரனுக்கா உன்னைத் தருவேன்; முடியாது மகளே முடியாது. வைதீகம் நசித்துப் போகும், வைகுண்டத்திற்குவழி கிடைக்காது'' என்று புலம்பினர்.

இறுதியில் எனக்கு அறிமுகமாகாத, எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்த ஒருவருக்கும் — எனக்கும்தான் ஜாதகம் பொருந்துகிறது என்று சொல்லிஎன்னை அந்தப் புதுமணிதருக்கு தாரமாக்கினுர். நீங்கள்

[ 10-ம் பக்கம் ]

## எங்கே அந்த நேச மொழி?

★

'அதிகாரத்தை வகிக்கும் மதியிலிகள் தங்களுடைய கருத்துக்குப் பொருந்தாத எதையும் காணமுடியாத குருடர்களாகி விடுகிருகள். அவர்களுடைய மூளைக்கு கிளர்ச்சிக் காரர்கள் தான் புரட்சியை உண்டு பண்ணுகிருர்கள் என்று தோன்றுகிறது. ஒரு கிளர்ச்சிக்காரன் சோல்லுகிருன் என்பதற்காக லட்சக் கணக்கான ஜனங்கள்செய்கையில்இறங்கிவிடுகிருர்கள்என்பதுதவறு'

யாருடையவாசகம் இது? புரட்சியிலே புதுமை காணத் துடிக்கும் அந்த புரட்சி வாதியார்!என்றெல்லாம் கேட்கத் தோன்றும் உங்கட்கு! ஆமாம், கெடுமனம் ஒழிய வேண்டும், விடுதலை நாடாக்க வேண்டும் இந்தியாவை, என்று எண்ணி செயலாற்றிய ஜவகர்லால் நேருஅவர்களின் வாய் மொழிதான் மேலே யிருப்பது. தோழர்களே, இது கண்டு மகிழ்ச்சியில் மூழ்கி விடாதீர்கள், அந்த மகிழ்ச்சி அற்ப மகிழ்ச்சியாகி விடப் போகிறது.

எந்தப் பண்டிதர் அந்த முத்தான வார்த்தைகளை - மணிபோன்ற மொழிகளைக் கொட்டினுரோ அதே பண்டிதர் சென்றவாரம் ஆஜ்மீர் கூட்டத்தில் என்ன சொல்லியிருக்கிருர் பாருங்கள், "புரட்சி என்பது ஊர்வலத்திலும், ஆர்ப்பாட்டங்களிலும்இல்லை.அதுமடமையாகும்''

"ஒரு கிளர்ச்சிக்காரன் சொல்லுகிருன் என்பதற்காக லட்சக் கணக்கான ஜனங்கள் செய்கையில் இறங்கி விடுகிருர்கள் என்பது தவறு''—இது பண்டிதரின் கூற்று; புரட்சியால் தான் சுகம் காணமுடியும், நாடு சுதந்திரமடைய முடியும் என்ற நிலை அவருக்கு இருந்த காலத்தில்!—1932-ல்!

'புரட்சி என்பதுஊர்வலத்திலும் ஆர்ப்பாட்டங்களிலும் இல்லை—அது மடமையாகும்''—இதுவும் பண்டிதரின்கூற்றுத்தான், புரட்சியால் சிங்காதனமும், செங்கோலும் பறிபோய்விடும் என்ற நிலை அவருக்கு ஏற்பட்டுள்ள இந்நாளில்1954ல்

மக்களின் எழுச்சி சாமான்யமானதல்ல, தலைவனுக்குப்பயந்து,பணிந்து, எழுப்பப்படும் காட்டுக் கூச்சலல்ல என்றுபொருள் படக்கூறிய அலகாபாத் பண்டிதரின் அருங்கருத்தை-பேருண்மையை, அவர் ஏற்றிருக்கும் பதவியும், சிரசிலே ஏறியிருக்கும் அதிகார போதையும் மக்களை செம்மறியாட்டுக் கூட்டம் என்று சொல்லக் கூடத் தூண்டிவிட்டிருக்கிறது. ஊர்வலம் நடத்துவது மடமையாம்! ஒரு வேளை தண்டவாளங்களைப் பெயர்த்ததறிவதும் தபாலாபீசுகளை நிக்கிரையாக்குவதும் தான் புரட்சி என்று பண்டிதர் கருதுகிருரோ என்னவோ! காதலி,மனைவியானுல் நேச மொழிகள் நெருப்புச் சொற்களாகும் என்பார்கள் இலக்கிய மேதைகள்—அதை, இந்த அரசியல் மேதை மெய்ப்பிக்க முயலுகிருர்போலும்!

# சின்னச் சின்ன வீடு கட்டி—சிங்காரக் கதை கேட்டு......

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

புதுக் குரல் அழைக்கிறது — திரும்பிப் பாருங்கள். ஏன் திகைக்கிறீர்கள்? அழைப்பது யாரென்று? குரலிலே காணும் அன்பு கண்டா? அழைப்பிலே பளிச்சிடும் ஆசை அறிந்தா? இருக்கலாம்; இருக்கலாம்.... அழைப்பது அன்புக் குரல்தான்; அதிலும் உங்கள் அக்கரையில் அதிகம் நாட்டம் கொண்ட பாசக்குரல்.

இந்தக் குரல் சாதாரணமானதல்ல; உங்கள் ஆசைத் தாத்தாவின் குரல் – வானத்து மதி காட்டும் பாட்டியின் குரல் — கேட்பவைகளை வாங்கித் தரும் அப்பாவின் குரல் — அமுதூட்டும் அம்மாவின் குரல் – "முத்தே! அமுதே!" என்று செல்லம் கொஞ்சும் அக்காவின் குரல் — "முட்டாளே! மைத்தியமே!" என்று அன்பாகத் திட்டும் அண்ணனின் குரல் — இவைகளுக்குச் சமமான குரல்! ஆமாம்; செல்வங்களே! அவர்கள் உங்களை அன்போடு அழைப்பார்கள். ஆசையோடு பேசுவார்கள். அதோடு மட்டுமல்ல; உங்களுக்கு எப்போதும் நல்லதே நினைப்பார்கள்; நன்மையே செய்வார்கள்.

நாங்களும் அதைத்தான் நினைக்கிறோம். அந்த நினைப்பின் முதல் குரல்தான் இந்த அன்பழைப்பு.

அழைத்தது ஏன் தெரியுமா? உங்களுக் கெல்லாம் ஒரு தேன் செய்தி சொல்ல — தித்திக்கும் பரிசு தர — அது தான் **பிறைவானம்** — இந்தப் பகுதி — உங்களின் சொந்தப் பக்கம்.

அலுவலகத்திலிருந்து வீடு திரும்பும் அப்பாவின் கையிலே அல்வாப் பொட்டலம் இருக்கிறதா? — கல்லூரியிலிருந்து திரும்பும் அண்ணனின் கையிலே சாக்லெட் இருக்க வேண்டுமே? – கடை வீதி சென்று வரும் தாத்தாவின் மடியிலே கரும்புத் துண்டாவது இருக்குமா? — என்று 'பொல்லாத கவலை' கொள்பவர் உங்களில் அநேகர். எதிர்பார்த்த அவை இல்லாவிட்டால் 'உர்ர்...' என்று மூலையில் உட்கார்ந்து விடுபவர்கள் அவர்களில் பலர்.

அந்த அல்வாவுக்குப் பதிலாக — சாக்லெட்டுக்குச் சமமாக — கரும்புக்கு ஈடாகத்தான் இந்தப் பிறைவானம்.

இந்தப் பக்கத்திலே உள்ள ஒவ்வொரு வரியும் ருசிக்கும்; ஒவ்வொருஎழுத்தும்இனிக்கும்.

உங்களுக்குத் தேவையான நல்லவைபல இந்தப் பக்கத்தில் வரும். கதை இருக்கும்; கவிதை வரும்; வேடிக்கை உண்டு; விநோதமும் உலவும். உங்கள் பிஞ்சு நெஞ்சத்துக்கு —துள்ளி விளையாடும் தூய உள்ளத்துக்கு எவை எவை வேண்டுமோ அவை எல்லாம் இருக்கும். ஏனெனில் இன்று நீங்கள் அடி எடுத்து வைக்கும் பாதைதான் நாளை உங்களை உயர் இடத்திற்கு அழைத்துச் செல்லும்.

சரித்திரம் படித்திருப்பீர்களே நீங்கள் — அதிலே மாவீரன் அலெக்சாண்டர் வருவான்; உலகத்தையே ஆட்டி வைத்த நெப்போலியன் வருவான்; ஹிட்லர் இருப்பான். அதிக தூரம் போவானேன்? நம் தமிழகத்துச் சரித்திரமே போதுமே! சேரனைத் தெரியும் உங்களுக்கு; சோழனை அறிவீர்கள்; பாண்டியனைப் பற்றியும் படித்திருப்பீர்கள்; மற்றும் அசோகன்! சிவாஜி! இன்னும் பலரைப் பற்றித் தெரியுமே! அவர்களைப் பற்றி படிக்கும் போது — அவர்களின் வீரச் செயல்களைக் கேட்கும்போது உங்களுக்கு எத்தகைய உணர்ச்சி உண்டாகிறது! நெஞ்சத்திலேதான் என்ன என்ன எண்ணங்கள் குதித்தாடுகின்றன!

பூகோளமும் தெரியும் உங்களுக்கு — அதிலே நடுக் கடலில் நாடு பிடிக்கக் குதித்த வாஸ் கோடகாமா வருவான்; இமய மலையின் உச்சியை எட்டி மிதித்த டென்சிங் வருவான் அந்த வீரர்களின் திடுக்கிடும் கதைகளைப் படிக்கும் போதெல்லாம் உங்கள் மனதிலேதான்என்ன என்ன நினைவுகள் பொங்கி எழுகின்றன! நாமும் 'அவர்களை'ப்போல் ஆக வேண்டுமே என்ற ஆசை துள்ளி விளையாடும்.

அந்த ஆசைதான் உங்களின் எதிர்காலம்; அந்த ஆசையை நிறைவேற்ற எடுக்கும் முயற்சி தான் உங்களின் இன்றைய கடமை.

ஆமாம்; ஆழ்கடலின் அலைகளுக்கும் சுழன்றடிக்கும் சூறாவளிக்கும் அஞ்சாமல் கப்பலோட்டிய வாஸ்கோடகாமா உங்களைப் போல் இருக்கும் போது என்ன செய்வானும் தெரியுமா? ஓடும் மழைத் தண்ணீரிலே காகிதக் கப்பல் விட்டு கனைக்குத்தானே சிரிப்பானும்.

காற்றிலே மிதக்க விமானத்தைக் கண்டு பிடித்தரைட் சகோதரர்கள் பட்டம் விட்டுப் பார்ப்பதிலே போட்டி வைத்துக் கொள்வார்களாம்.

அவை எல்லாம் எதைக் காட்டுகின்றன?

சின்னச் சின்ன வீடு கட்டி சிங்காரக் கதை கேட்டு துள்ளி விளையாடும் பருவத்தில் கொண்ட ஆசைதான் அவர்களைப் பார் போற்றும் மேதைகளாக்கியது.

அதை உணரவேண்டும் நீங்கள்; உணர்ந்தபின் நடக்க வேண்டும். உங்களை நடத்திச் செல்ல – விழிகாட்டி வழிகாட்ட அப்பா இருக்கிறார்; அம்மா இருக்கிறார்; ஆசிரியர்கள் இருக்கிறார்கள்; நாங்களும் பங்கேற்க வருகிறோம்.

அதற்கு உதவவே இந்தப் பக்கம். அப்பாவின் கையிலே அல்வாவைத் தேடும்போது —அண்ணனின் பையிலே சாக்லெட்டைத் தேடும்போது — தாத்தாவின் மடியிலே கரும்புத் துண்டைத் தேடும்போது — — பக்கத்திலேயே 'முரசொலி' யையும் அதிலே பிறைவானத்தையும் தேடுங்கள்!

அடுத்த பிறைவானத்தில் உங்களுக்கு ஒரு நல்ல கதை சொல்லுவேன்; வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் வேடிக்கைக் கதை தருவேன்-புதிர் போடுவேன்—இன்னும் எத்தத்தனையோ! பாருங்களேன்!

— **கட்டபொம்மன்**

## சிறிய வயதிலே

அவன் சிறுவன்—பள்ளி மாணவன்.

அப்போது மழைகாலம்; ஊரெல்லாம் பனி; ஒரே பனிக்கட்டி மயம்.

அதைப்பார்த்துக்கொண்டிருந்தான் அந்தத் தம்பி. சும்மா இருக்குமா அவன் மனசு? திடீரென பரபரவென்று என்னவோ செய்தான். என்ன ஆச்சரியம்! கொஞ்ச நேரத்துக்குள் அந்தப் பனிக் கட்டிகளால் ஒரு கோட்டையையே கட்டி விட்டான்.

தம்பிக்கு இன்னொரு ஆசை உண்டாகி விட்டது. அந்தக் கோட்டையை வைத்து விளையாட நினைத்தான். உடனே தன் நண்பர்களை இரண்டு பிரிவாக்கினான். ஒரு பிரிவுகோட்டையைக் காக்கும் வீரர்கள்; இன்னொரு பிரிவு கோட்டையைத் தாக்கும் எதிரிப் படை; இப்படி ஏற்பாடு!

ஆனால் அவனது நண்பர்கள் கூட்டத்திலே ஒரு சோணிப் பையன் இருந்தான். அவனுக்கு விளையாட்டு வேப்பங்காய். ஆகவே விளையாட மறுத்தான்.

ஆனால் இவனா விட வில்லை. கெஞ்சி அழைத்தான்; கோபமாகவும் கூப்பிட்டான். ஊஹூம்...... அவன் அசையவில்லை. அதோடு நின்றானா? விளையாட்டையும் கேலி செய்ய ஆரம்பித்தான்.

அவ்வளவுதான். வந்தது கோபம் நமது சுட்டித் தம்பிக்குபுலிப்போலபாய்ந்தான் அந்த சோணிப் பையனின் மேல். 'பளார் பளார்'என்று அறைந்தான். பனியிலே உருட்டினான்.

இந்தச் சம்பவம் நடந்து பல வருடங்கள் சென்று விட்டன. அதன் பிறகு அந்தச் சின்னத் தம்பி ஒரு நாட்டின் சர்வாதிகாரி.

ஒரு நாள் அவனுக்கு தனது பால்ய நினைவு வந்து விட்டது. தன்னால் அடிபட்ட அந்த சோணித் தம்பியை தேடிப்பிடித்து வரச் சொன்னான். அவனது ஏழ்மையைக்கண்டு, நிறைய பொருளுதவி செய்தான்.

அவன்தான் 'முடியாது' என்ற சொல் தன் அகராதியில் கிடையாது, என்று முழங்கியவன்பிரஞ்சுநாட்டு மாவீரன் நெப்போலியன்.

## பெரிய மனிதர்கள்

## நானிலத்தின்....

( 4-ம் பக்கம் தொடர்ச்சி )

கன்சர்வேடிவ்கள் பிரபுக்கள், தொழிற் கட்சியினர் தொழிலாளிகள்! இந்த இரண்டு பேருடன் கலக்கவும்லாயக்கற்றவர்கள், ''ஊசலாடும் வாக்காளர்கள்.

அவர்களால் பிரபுக்கள் நிலைமைக்கு ஏற முடியாது-தொழிலாளர் நிலைமைக்கு இறங்கவும் முடியாது.

ஒன்று, முடியாத காரணம்—மற்றது விரும்பாத காரணம். இரண்டுக்கும் நடுவிலே வாழ்ந்து தீரவேண்டிய பரிதாபகரமான தோழர்கள் அவர்கள்.

பொதுவாகப் பார்க்கப் போனால், மனித சமுதாயத்தின் அச்சாணி இந்த நடுத்தர வகுப்பார்தான். முதலாளித்துவமும் பாட்டாளி வர்க்கமும் உலகத்தின் இரு வேறு துருவங்களாக இப்போது செயல் படுகிற தென்றால், அந்த இரு துருவங்களையும் உருவாக வைத்துக் கொண்டிருப்பவர்கள், நடுத்தர மக்கள் எனும் 'இருசு'தான்!

கோளத்தின் இருசு ஒடிந்தால்—அல்லது வளைய ஆரம்பித்தால் துருவங்கள் உருவாகஇருக்காது; அப்படி இருந்தாலும் அதைப்பற்றி அபிப்பிராயம் சொல்ல ஆட்கள் இருக்க மாட்டார்கள்!

துருவ ஆராய்ச்சியிலேயே மூழ்கி விட்டிருக்கும் இன்றைய உலகம், இருசு வளைந்து வருவதைக் கவனிக்க மறுத்து வருவதைக் கண்டித்து, ஆற்க்காட்டு மேதை—அரசியல் பண்டிதர்—ராமசாமி அவர்கள் உலகக் காதுகளுக்குமெட்டும்படியானதொரு முழக்க மிட்டிருக்கிறார்.

இம்மாதம்25-ந்தேதி சென்னை கெஜட்பதி வில்லாத ஊழியர்கள் சங்கக் கூட்ட மொன்றில் நடுத்தர மக்கள் எவ்வளவு "அபாயகரமானவர்கள்" என்பதைக் சுட்டிக் காட்டி, அபாயத்தைப் போக்கும் பரிகாரங்கள் சிலவற்றையும் சொல்லி யிருக்கிறார்.

அவருடைய அறைகூவல் எத்தனை பேருடைய மண்டையில் ஏறப்போகிறதென்ற கணக்கு நமக்குத் தேவையில்லை. ஆனால், நடுத்தர வகுப்பாரையும் உள்ளடக்கிய ஒரு இயக்கம்தான் நமது திராவிட முன்னேற்ற கழகம் என்பதை இந்தச் சமயத்திலே தெளிவுபடுத்திவிட விரும்புகிறோம்.

'அரசனின் கோபம் ஆளைக் கொன்றுவிடும்; ஆண்டியின் கோபம் பட்டினி போடும்; நடுத்தரமானவன் கோபமோ மனிதனைச் சித்திரவதை செய்யும்'' என்ற பழமொழியைப் போல, மேல்குடி மக்களின் கோபத்தால் தனி மனிதர்கள் ஆயிரக் கணக்கில் பழிவாங்கப் பட்டிருக்கின்றனர்; தொழிலாளிகளின் கோபத்தால் இரண்டு மூன்று நாடுகளில் ரணகளறி ஏற்பட்டிருக்கிறது; நடுத்தர மக்களின் கோபத்தால், இந்த அவனியே அவதிக்குள்ளாகி, அதன் காரணமாக ஏற்பட்ட அழிவை இன்னும் சரிகட்ட முடியாமல் திணறுகிறது.

ஜெர்மனிக்கு ஏற்பட்ட தோல்வியும், வார்சேல்ஸ் ஒப்பந்தமும் இட்லரைத் தலைவனாக்கியது என்பது உண்மைதான்; ஆனால், நடுத்தர மக்களுக்கு ஏற்பட்டிருந்த அதிருப்தியின் காரணமாகத்தான் நாஜிசக் கட்சி பலம் பெற்றது; இட்லர் ஈடு எதிர்ப்பற்ற சர்வாதிகாரியாக முடிந்தது. பாசிசமும்,அதே ரீதியில்நடுத்தர மக்களின் அதிருப்தியில் குளிர் காய்ந்து வளர்ந்த இயக்கம்தான்.

இந்த இரண்டு இயக்கங்களின் வளர்ச்சியால் உலகம் எவ்வளவு பாடுபட்டது? எவ்வளவு சீரழிவுக்கு ஆளானது?

போர் முடிந்த பிறகு ஏழையை ஏழையே 'ஆராய்ச்சி' செய்து சமாதானத்துக்கு வழி தேடினார்களே தவிர, அடிப்படைக் காரணத்தை ஆடிக்காற்றில் பறக்க விட்டு விட்டனர்.

தொழிலாளிகளுக்குப் போராடும் சக்தியிருக்கிறது; முதலாளிகளுக்கு அதைச் சமாளிக்கும் சக்தி யிருக்கிறது.

முதலாளிகளுக்கு முதல் போடும் சக்தி யிருக்கிறது; தொழிலாளிகளுக்கு உற்பத்தி செய்யும் சக்தி யிருக்கிறது.

முதல் போட்டு உற்பத்தி செய்ததை வாங்கும் சக்தி யாருக்கிருக்கிறது?

முதல் போடுபவனை அரசாங்கம் பாதுகாக்கிறது: உற்பத்தி செய்பவனை சங்கங்கள் ஆதரிக்கின்றன — அரசாங்கங்கள் கூட சில சலுகைகளைத் தருகின்றன!

இந்த இருவருக்கும் பாலம் அமைத்துக் கொடுக்கும் நடுத்தர மக்களுக்கு என்ன உரிமைகள் இருக்கின்றன? இவைகள் உடனடியாக ஆராயப்பட வேண்டும். நடுத்தரமக்களின் வாழ்க்கை நிலை உயர வேண்டும்.

அதற்கான வழி வகைகளை நாட்டோர் அனைவரும்—நாடு வாழ எண்ணும் நல்லோர் அனைவரும் சிந்தித்துச் செயல் புரிய வேண்டும். நடுத்தர மக்கள் தான் நானிலத்தின் அச்சாணி! அதை மறந்திடக் கூடாது!

— வில்லவன் கோதை

## மேதை மறந்தது!

★

கடந்த வாரம் சென்னையில் என். ஜி. ஓ. க்களைப் பற்றிப் பேசிய ஆற்காட்டார் "ராஜ்ய சர்க்கார் ஊழியர்கள் அல்லும் பகலும் உழைத்துச் சேகரிக்கும்வருமானங்களை,டில்லிக்கு அனுப்பாமல் நாமே வைத்துக் கொண்டு, நமக்குள்ளாகவே வேலைகளைக் கவனமாகச் செய்து முடித்து, எல்லோருக்கும் திருப்தியான அளவு சம்பளத்தைப் பங்கு போட்டுக் கொள்ளக் கூடாதா" என்று பேசியிருக்கலாம்.

## மயிலாப்பூர்...

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

பெற்றுப் பெருகி பெரிய வீட்டுக் காரராக வாழ்வீர்கள் என்று சொன்னவரும், எங்கள் ஜாதகங்கள் இணைகின்றன என்று சொன்னவரும் இதோ நிற்கிறாரே இவர் தான் என்று எதிரே நின்ற புரோகிதரைக் காட்டினாள் அனல் கக்கிய அணங்கு.

மன்னர் குறுக்குக் கேள்வியைப் போட்டார்.

"அதற்கும், இவருக்கும் தொடர்பு என்ன? உன் வாழ்வைத் தொடக்கியவர் இந்தப் புரோகிதர்தானே!"

"ஆமாம், வாழ்வைத் தொடக்கிவைத்தார், ஆனால் அவர் வாக்கை நம்பி நாசமானேன்" என்றாள் மங்கை. ஓடி களைப் புள்ள மாட்டைப் போல அவளுக்கு மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கிற்று. ஜாதகம் பார்த்தவர் இவர், ஜாதகத்திற்கு 'தீர்க்க ஆயுள்,- உண்டு என உறுதி கூறியவர் இவர்; ஆனால் நடந்த தென்ன? மாங்கல்யம் நிலைத்ததா? நான் சுமங்கலியாக வாழ்கிறேனா? இல்லை. என் கரம் பிடித்து உறவு பூண்ட என் கணவர் என்னைப் பிரிந்தார்—சரசாங்கி வேறொருத்தியை நாடியல்ல, சாவைத்தேடி! ஆம், வேந்தே என் கணவர் இறந்து விட்டார் — நான் இறந்து கொண்டிருக்கிறேன். கருத்தொருமித்த காதலனுக்கு 'செவ்வா தோஷம்' என்று சொல்லி எங்கள் நட்பை துண்டித்துவிட்டு புத்துறவு ஏற்படுத்தினர். புதியவர் இறந்தார்-'தோஷம்' பிடித்த ஓவியர் வகையோடு வாழ்கிறார். குடும்ப விளக்கு அங்கே ஒளி விடுகிறது; ஏன் இந்த நம்பிக்கை மோசம்? கண்ணீருக்கு வாயில்லை, காவலன் எதிரே நாம் நிறுத்தப்பட மாட்டோம் என்ற கர்வமா?"

"பாவாய், நீ கொண்டு வந்திரும் வழக்கு விசித்திரமானது. இதுவரை எந்த கொலுமண்டபத்திலும் இப்படி ஒரு வழக்கு நடந்ததாகவே நான் கேள்விப் பட்டதில்லை. நம்பிக்கை மோசம் செய்த இந்தப் புரோகிதர் உனக்கு நஷ்ட ஈடு தர வேண்டும்; அப்படித்தானே!"

"அது மட்டுமல்ல அரசே, எதிர்கால பெண்ணினத்திற்காக இவ்வழக்கின் தீர்ப்பு உறுதுணையாக இருக்க வேண்டும். 'திருமணம்' என்றால் ஜாதகத்திற்கு இடமில்லை என்ற நிலை சமுதாயத்தில் ஏற்பட வேண்டும்,"

மன்னர் அலட்சியப் புன்னகை பூத்தார். மங்கையின் உடல் சிலிர்த்தது.

"விதிப் பயனுக்கு வேந்தன் என்ன செய்ய முடியும் பெண்ணே!"

"விதி! விவேகத்தின் வினவுக்கு பிடிபடாமல் தப்பிச் செல்ல உபயோகிக்கும் 'வேதச் சொல்'! கடைத் தேங்காய் அழுகல் என்றால் கடைக்காரன் திரும்பப் பெற்றுக்கொள்கிறான்; வாங்கிய பானை ஓட்டைப் பானையாயிருந்தால் சட்டி வியாபாரி பணத்தை செலுத்தி விடுகிறான். அதைப் போல இதுவும் ஒரு வியாபாரந்தானே வேந்தே! இதையும் மறுக்கிறீர்களா? புரோகிதர் பார்த்த ஜாதகம் பொய்—அது எனக்கு பாதகமாய் முடிந்துவிட்டது. எனவே நான் அவர் மீது பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். அணைந்த வாழ்வுக்கு அவர் ஈடு செய்ய வேண்டும் அல்லது பழிக்குப்பழி வாங்க வேண்டும். இனிமேல் ஜாதகமே பார்ப்பதில்லை என்று உறுதிகூற வேண்டும்"

மன்னனின் மூளை குழம்பியது. அவையோர் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

°°° °°° °°°

கூட்டத்தில் ஏற்பட்ட பரபரப்பு என் நினைவுச் சுழலைச் கலைத்துவிட்டது. கூட்டம் முடிந்து எல்லோரும் எழுந்து போய்க் கொண்டிருந்தார்கள். நான் மட்டும் உச்சிமாடத்திலேயே நின்று கொண்டிருந்தேன். "வருங்கால வாழ்வை குறைந்த தொகைக்கு நிர்ணயித்துக் கூறும் புரோகிதர்களின் கணிப்பு தவறினால் அவர்களை நீதிக்கு முன்பாக நிறுத்த வேண்டும்" இந்தவைர வாக்கியம் என் நெஞ்சில் மீண்டும் ஊர்ந்தது.

"சக்கு சக்கு" என்று என் அப்பா அழைத்தார். "காலையிலே பிள்ளை வீட்டார் வருவார்கள் காலாகாலத்திலே போய் படு" என்றார். பெருமூச்சு விட்டுக் கொண்டே மாடியை விட்டிறங்கினேன். அப்போதும் அண்ணாவின் சொல்லோவியம் உள்ளத்தில் முத்திரை பதிக்கத் தவறவில்லை.

★


## புதையல்

★

அடுத்த இதழில் — உங்கள் கரங்களில்!

**புதையல்! புதையல்!**

தொடர்கதை துவங்குகிறது —விற்பனையாளர்களிடம் முன்னதாகவே உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

# கலைத்தோட்டம்

## சிந்தனைக் கதிர் — செக்காவ்

கண்களுக்கு களிப்பூட்டும் வண்ண மலர்கள் வாரி இறைக்கப்பட்ட பூக்காடு; எண்ணற்ற மலர் வகைகள் தான்; எனினும் ஒரு குறை இருக்கும்; அதிலே ஒரு "ரோஜா" இல்லை என்றால்—

திரும்பும் திசை எல்லாம் தித்திக்கும் காட்சி தரும் அழகு மணி மண்டபம்; அதிலேயும் ஒரு குறை இருக்கும்; அங்கே ஒரு வண்ணத் தீபம் இல்லை என்றால்-

அதைப் போலத்தான்;

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இலக்கியத்திலே நல்ல மூளை—புதுச் சுவையைக் கண்டு பூரிப்படைந்த ரஷ்ய இலக்கியத்திலேயும் ஒரு பெரும் குறை இருந்தது-இருப்பதாகக் கருதப்பட்டது; அங்கே 'சிறு கதை' இலக்கியம் வளராத காரணத்தால்!

பிரஞ்சு நாட்டிற்கு ஒரு மாப்பசானை அறிமுகப்படுத்திய அந்த இலக்கியம், ரஷ்ய நாட்டிற்கும் ஒரு மேதையைத் தரத் தயங்கவில்லை — அந்தச் சிறுகதைப் பெரு மன்னன்தான் 'செக்காவ்' என்று ரஷ்ய மக்கள் இன்று செல்லமாக அழைக்கும் ஆண்டன் செக்காவ் என்பான்.

பிற்போக்குத் தனத்தின் பேயாட்டம் — முற்போக்கை முறித்தெறிய புதுநாட்டம்— இலக்கிய மறுமலர்ச்சியை, அது தந்த விழிப்புணர்ச்சியை நசுக்கி நாசமாக்க துடிதுடிக்கும் ஆட்சியாளரின் கருத்தோட்டம் — இதற்கிடையேதான் மலர்த் தோட்டத்திலே புரட்சி மணம் பரப்பும் புதுமலரைத் தோற்றுவித்தான் அந்த 'வாழ்வை' உணர்ந்தவன்—துணிகர முன்னோடி—ஆண்டன் செக்காவ்.

செக்காவின் சிறுகதைகள் வறுமைச் சுரங்கத்திலே தோண்டி எடுக்கப்பட்ட கண்ணீர்த் துளிகள்; ஏழ்மை எனும் பாசறையிலே தீட்டத் தீட்ட மெருகேறிய பயங்கர உண்மைகள் பளிச்சிடும் வாள்! அவனது உலகத்திலே சீமான்களின் சிறப்புகள் இருக்காது; அந்த சிறுமதி படைத்தோரின் சீர்கேடுகள் இருக்கும்—வண்ண மாளிகைகள் வந்து போகாது; மண்குடிசைகளின் மகிமை புலப்படும்— நிகழ முடியாத கற்பனைக் கூளங்கள் இருக்காது; ஜீவ ஓ... இருக்கும்; உயர்த் ...லவும். னியைத் ... லாமா?

அருங்கலைஞனை-இரும்பும் ஈரத்தைப் பாய்ச்சிய இலட்சியவாதியை — இலக்கிய உலகத்திலே அசையாத இடம் பெற்றுவிட்ட சிந்தனையாளனை ரஷ்யா 1860-ம் ஆண்டிலே பெற்றது; நாற்பத்து நான்கு ஆண்டுகள் அவன் படைத்த சுவை அமுதைப் பருகிப்பருகிக் களித்தது.

ஆண்டன் செக்காவ் இலக்கிய பசி தீர்த்த பேனாவோட்டி மட்டு



மல்ல; உடல் பிணிகளையும் ஒழிக்கும் திறன் படைத்த மருத்துவன்; பட்டம் பெற்ற டாக்டர்!

'எழுதிப் பிழைக்க எண்ணுபவன் என்றென்றும் ஏழையே' என்றிருந்த உலக நியதியைத் தன் வாழ்வில் பொய்யாக்கிய பெருமை செக்காவைச் சேரும். எழுதுமுன் ஏழையல்ல அவன்; எழுதியும் ஏழையல்ல; ஆனால் ஏழைகளோடு பழகினான்; வாழ் விழந்தோர்களோடு இரண்டறக் கலந்தான்; வஞ்சிக்கப்பட்டவர்களிடையே புகுந்து புறப்பட்டான்; அந்த நல்லவர்களின் நெஞ்சுலுக்கும் அல்லல்களுக்கு எழுத்து வடிவம் கொடுத்தான்; படித்தோர் சிந்திக்கும் பண்பைப் பரப்பினான்.

உலக அறிஞர்கள் எவரும் உலகத்தோடு ஒன்றிப் பழகி வாழ்வது அபூர்வம்; அவர்களுக்கென்று தனி உலகம் உருவாகி இருப்பதாக உணர்வார்கள்; உற்றார் உறவினரைக் காண்பதை வெறுப்பார்கள்; பெற்றோரைக் கூட பார்க்க மறப்பார்கள்; சிந்தனைதான் அவர்களின் ஒரே உலகம்—சொர்க்கம்! இப்படித்தான் மேதைகள் பலரின்'வாழ்வு இலக்கணம்' இருந்து வந்திருக்கிறது பல தலைமுறைகளாக. ஆனால் செக்காவ் அதனின்றும் கூட விலக்காகிறார். அவர்பிறந்த நேரம் முதல் மறைந்த கடைசி நிமிடம் வரை தனது பெரிய குடும்பத்தின் பாசத் தொடர்பிலேயே பின்னிக் கிடந்திருக்கிறார்.

செக்காவ் எழுதத்தான் வேண்டுமென்று எழுதத் தொடங்கவில்லை. பொழுது போக்குக்காக கல்லூரி நாட்களில் சின்னஞ்சிறு கேலிக் கதைகளை எழுதினார். ஆனால் இலக்கிய உலகம் சாமான்யமானதா என்ன? நடுக்கடலில் தனித்திருந்தால் என்ன—வனத்திலேதான் மறைந்திருந்தால் என்ன—மேதைகளைத் தேடிப் பிடித்து இழுத்துவந்து மக்கள் மத்தியில் நிறுத்தாமல் விடாதே! அப்படி அழைக்கப்பட்டவர் தான் அவர். ஆகவேதான் அவர் தனக்கு வாழ்த்துப்பாடி வரவேற்ற இலக்கியஉலகத்துக்கு நன்றி செலுத்தினார், எண்ணற்ற எழுத்தோவியங்களை வாரி வழங்கியதன் மூலம்.

செக்காவின்கதாபாத்திரங்கள் சுவைமிகுந்தபுதுப்படைப்புகள்; வாழ்க்கைப் புயலிலே சிக்கித் தடுமாறும் சிறு துரும்புகள்; தேடித் தேடி கண்டுபிடிக்கும் நல்முத்துக்கள்!

ஆமாம்! செக்காவ் ஒரு கதை எழுதும் காலத்தைப்போல இரு பங்கு நேரம் செலவழிப்பாராம் அதற்கான கதாநாயகனைத் தேர்ந்தெடுக்க! அத்தகைய தேர்வுக்காக அவர்நாடு சுற்றியிருக்கிறார்; காடுமலை அலைந்திருக்கிறார். ஸாகலேன் எனும் தீவில்—தீவு என்று சொல்வதைவிட 'தீக்குளம்' எனலாம்—அங்கேயும் சில ஆண்டுகள் தங்கியிருக்கிறார் அவர். அந்தத் தீவு ஜார் மன்னனின் கடும் கோபத்திற்கு இலக்கான ரஷ்ய மக்களுக்கு புகலிடம் தரும் இடம். புலியின் பாய்ச்சலுக்கு முன் சிக்கித் தவிக்கும் ஆட்டுக் கூட்டங்களைப் போல—உயிரற்றப் பிணமாக நடமாடிக் கொண்டிருந்த அந்த ஆயுள் கைதிகளிடையே செக்காவ் உலவினார். தனக்குத் தேவையான—தன் எழுத்துக்கு அவசியமான சில கதாபாத்திரங்களைத் தேடிக் கண்டார். அவர்களை வைத்துப் பின்னிய சிறுகதைகளிலே பெரும் வெற்றியைக் கண்டார்.

இப்படி எடுத்த முயற்சிகள்—எண்ணாத செயல்கள் அனைத்திலும் வெற்றியையே கண்ட செக்காவின் சிருஷ்டிப் பாத்திரங்களோ வெற்றியின் வாடையையே நுகர்ந்தறியாதவர்கள். அவரது'முதல் வகுப்பு பிரயாணி' ஒரு அப்பாவி — சோகத்தின் பிம்பம்; 'பந்தயம்' ஒரு பண முதலையோடு போட்டியிட்டு தானாகவே தோல்வியைத் தேடி ஓடிய ஒரு ஏழை வக்கீலின் கதை; 'தலையில்லாத கதை' இன்பவாடை இல்லா துன்பக் குகையைக் காட்டும்; 'தாவிச் சென்றவள்' மருத்துவம் கற்றும் வாழ்வை உணராத தனது கணவனின் சாவுக்குக் காரணமான சதிகாரியைப் பற்றியது; 'கோடைப் புயலு'ம் 'வரண்ட வாழ்க்கை'யும் பெயருக்கேற்ற படிஏழைகளின் 'பெருமை'யைக் கூறும்.

செக்காவ் சிறுகதைகள் மட்டுமல்ல; சிந்தையைக் கிண்டும் சில சிறந்த நாடகங்களும் எழுதியிருக்கிறார். அவைகளில் முன்னணியில் நிற்பவை கடற்பருந்து, போட்டல் வெளி, மூன்று சகோதரிகள் முதலியவை. அந்த அவரது முயற்சிதான் அவருக்கு ஒரு வாழ்வு ஜோடியைத் தேடித் தந்தது. ஒல்கா எல் நிப்பர் என்ற நடிகையை காதல் மனைவியாக அளித்தது. கருத்தொருமித்த அவ்விருவரின் காதல் வாழ்வு அதிக நாள் நீடித்திருக்கவில்லை; மணமான மூன்றாவது ஆண்டு அவர் மரணப் பிடியிலே சிக்கினார்; மறைந்தார்.

இலக்கியத்தாய் அவரை நாற்பத்து நான்கு ஆண்டுகள் நடமாட விட்டது போதுமென்று தன்னிடமே அழைத்துக் கொண்டாள். ஆனால், அவர் விட்டுச் சென்ற 'இலக்கிய ஜோதி'களை அசைக்கவும் முடியவில்லை; அவை உலகத்தோரின் நெஞ்சத்திலே பறிக்க முடியாத இடத்தைப் பெற்றுவிட்டன.

**முக்கியமான ஒன்று...**

செக்காவின் புத்தகங்கள்—1016
வெளியான மொழிகள் — 68
விற்பனையான
பிரதிகள் — 3,95,48,000

●

## வருந்துகிறோம்

●

"நம் நாடு" இதழின் உதவி ஆசிரியர் தோழர் காஞ்சி கல்யாண சுந்தரம் அவர்களின் ஒரே மகனும், காஞ்சீபுரம் திருவாளர் பச்சையப்ப முதலியார் அவர்களின் மருமகனுமான தோழர் அருணாசலம் (ராமு) அவர்கள் சின்னாட்களாக 'டைபாய்ட்' ஜுரத்தினால் உடல் நலக் குறைவாக இருந்து (28-7-54) பகல் ஒன்றரை மணிக்கு காலமானார் என்ற செய்தி கேட்டு திடுக்கிட்டோம் — தாங்கொணா துயரமடைந்தோம். தோழர் அருணாசலத்துக்கு வயது 22.

தனயனை இழந்து தவிக்கும் தந்தைக்கும் மற்றோருக்கும் நம் வருத்தத்தையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர்

# கடைசிப்பக்கம்

வண்டமிழன்.—உதகை

(?) மனிதன், குரங்கினின்று தோன்றினன் என்று கூறுகிறன் டார்வின். ஆனல் "ஏனைய ஜீவராசிகளை உருவாக்குவதற்கு முன்னரே கடவுள் மனிதனைப் படைத்தார்" என்று மதநூல்கள் கூறுகின்றன. எதை நம்புவது?

மதநூல்கள் மனிதனல் எழுதப்பட்டவை. அதுபோல டார்வின் சித்தாந்தமும் ஒரு மனிதனல் எழுதப்பட்டது தான். நமக்குத் தெரிந்தவரையில் டார்வின் என்ற மனிதன், எழுதும்போது—அவன் மனிதர்களையும் மற்ற ஜீவராசிகளையும் கண்டபிறகே தன் எண்ணத்தை எழுதி வெளியிட்டான். மதநூல் எழுதியவர்கள் தங்கள் நூல்களை எழுதும்போது உலகில் வேறு எந்த ஜீவராசியும் (மனிதனைத் தவிர) தோன்றுமலிருந்திருக்க வேண்டும். அப்போது தான் மனிதன் சொல்லிக் கொள்ள முடியும்: "நான்தான் முதலில் தோன்றினேன்" என்று!

ஒன்று சுருக்கமாகப் புரிகிறது நமக்கு! குரங்கு நிலையென்ற அநாகரிக நிலையிலிருந்து மனித நிலைக்கு வளருகிறவர்கள், டார்வின் போன்ற சித்தாந்த வாதிகளை அணுகி புதிய புதிய விளக்கம் பெறுகிறார்கள்.

ஆனல் முதலில் மனிதன் தான் தோன்றினன் என்று கூறிவிட்டு, மனித நிலையிலிருந்து குரங்கு நிலைக்கு வளர்ந்து கொண்டிருப்பவர்கள் மத நூல்களை அணுகி விளக்கம் தேடுகிறார்கள். அவ்வளவுதான் வித்தியாசம்.

செல்வன்—இடையங்குளம்

(?) காந்தி, நேரு, பெரியார், அண்ணு இவர்களைப் பற்றி குறிப்பாகச் சொல்லவும்?

முறையே சொல்லுகிறேன் கேளும்! அமைதி, ஆத்திரம், ஆற்றல், அறிவு — இதுதான் தோழரே குறிப்பான விளக்கம்.

டி. சீதைமணுளன்—மதுரை

(?) ராவணனுக்கு பத்து தலை இருந்ததா? அல்லது பத்து தலைக்குள்ள அறிவாற்றல் இருந்ததா?

பத்துத்தலை என்பது எதைக் குறித்தாலும் சரி; ராவணன் தன் திராவிட இனத்தின் மீது "பற்றுதலை" வைத்திருந்தது என்னமோ உண்மை!

ராயப்பன்—சேலம்

(?) தினத்தந்தி—தி. மு. கழகத் தோழர்களை கிண்டல் செய்து எழுதுவது ஏன்?

அது பொய்த்தந்தி என்பதை குருவிக் கரம்பை பிள்ளையார் கோயில் செய்தியின் மூலம்—தி. மு. கழகம்—நிரூபித்து விட்டதல்லவா? அதனல்!

(?) பேனமுனை பெரிதா? கத்தி முனை பெரிதா?

வீரன்கையிலுள்ள கத்திமுனை பெரியது தான்—ஆனல் அந்தக் கத்தி முனையின் வலிமை, நாணயமுள்ளவனின் பேனு முனையிலேயே, காணப்படுகிறது. கத்தி தூக்கும் சக்தியை கோழைக்கும் உண்டாக்குவது பேனமுனை தான்!

(?) நாடு பிரிந்தால் நல்லாட்சி பெறுமா?

தேன், இனிக்குமா என்று கேட்கிறீரே—நண்பரே!

சே. ராமன்—குளித்தலை

(?) இரண்டு பூக்களிலே ஒன்று அழகுள்ளது. மற்றொன்று அழகில்லை. அழகில்லாதது மணம் தருகிறது. அழகுஉள்ளதில் மணம் இல்லை. அழகை விரும்புவதா? மணத்தைவிரும்புவதா?

ஏன்; இரண்டுமே ஓரளவுக்கு குறையாமல் உள்ள ரோஜா மலரை விரும்பிவிடுமே! வாழ்க்கைக்குக்கூட இந்த பதில் பொருந்துமே!

ந. சுந்தரம்—அம்பத்தூர்.

(?) இந்தியாவில் வாழ்வு எங்கே இருக்கிறது? வடநாட்டிலா? தென்னட்டிலா? அல்லது ஆண்டவன் சந்நிதானத்திலா?

எங்கும் வாழ்வு இருக்கிறது. ஆனல் அந்த வாழ்வை அனுபவிப்பவர்கள் தான் வேறுபடுகிறார்கள். வடநாட்டு வாழ்வை வடநாட்டார் அனுபவிக்கிறார்கள். தென்னட்டு வாழ்வையும் அவர்களே சுரண்டி அனுபவிக்கிறார்கள். "இது நியாயமா?" என்று கதறும் தென்தேச வாசிகளுக்கு பூர்வஜென்ம கர்மத்தை நினைவூட்டும் பூசுரப் பூசாரிகளுக்கு வாழ்வு ஆண்டவன் சன்னிதானத்தில் இருக்கிறது.

வில்லவன் கோதை — உப்புலியபுரம்]

(?) எண்ணம் முந்தியதா? செயல் முந்தியதா?

உடற் கூற்றில் அனமந்துள்ள அற்புதமான செயல் எண்ணத்தை தோற்றுவிக்கிறது—எண்ணிய பிறகு தானே நீங்கள், இந்தக் கேள்வித் தாளை எனக்கு எழுதி அனுப்புகிற செயலைச் செய்திருக்கிறீர்கள்?

ஈ. கே. டி. கமல்தீன் – சிங்கப்பூர்

(?) காமராசர் பதவி போனல் எந்தராசர் பதவி ஏற்பார்

எந்த ராஜராயிருந்தாலும் — மந்திரி பதவி தானே ஏற்க முடியும்!

என். சம்பந்தம்—சென்னை-1

(?) திராவிடநாடு எப்போது கிடைக்கும்? சொல்ல முடியுமா?

முடியும்! செப்டம்பர் மாதம் 17–ம் நாள்—அதாவது தி. மு. கழகம்—பெரியார்—என்ற இரு பெரும் சக்திகளும் பிறந்த நாளாகிய செப்டம்பர் 17–ல் திராவிடநாடு சுதந்திர மடைந்த நாள் நிச்சயமாக கொண்டாடப் படும். ஆனல் வருடத்தை மட்டும் இப்போதுகூற முடியாது!—

எ. அண்ணசாமி—வடுகபட்டி

(?) உலகத்திலேயே நுழைய முடியாத இடம் எது?

கடைசி வரையில் விரட்டப் படுகிற இடம்.

## இல்லையென்பார் யாரையா?

★

"புறநானூற்றுத்தமிழகம் மேற்கே கேரள நாட்டையும், வடமேற்கே கன்னட நாட்டையும், வடக்கே ஆந்திர நாட்டையும், தன்னகத்தே கொண்டிருந்தது. தமிழகத்தின் வடவெல்லை திருவேங்கடத்தை கடந்து நின்றது. கேரளரது மலையாளமும், கன்னடரது கன்னடமும், ஆந்திரரது தெலுங்கும் பழந்தமிழ் மொழியாமென்பது மொழி நூலறிஞர் பலகாலும் வற்புறுத்துரைத்துப் போதரும் பெருமொழி. இம் மலையாள முதலியன, வடமொழி முதலிய பிறமொழி கலப்பால் தமிழ்த்தன்மை மாறி வேற்றுமொழி போல இயலும் ஒலியும் பெற்று நிற்கின்றன."

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்—(ஔவை துரைசாமிப் பிள்ளை) புறநானூறு முன்னுரையில்!


## தீச்சுடர்

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு

திருச்சியிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் தீச்சுடர் ஆகஸ்டு முதல் வாரத்திலிருந்து 16 பக்கங்களாக வெளிவருகிறது. விலை அணு இரண்டுதான்.

நிர்வாகி தீச்சுடர்

மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. அலுவலகம்: 62, எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை–14.